384

தி 3.] 1924ஞு ஏப்ரல்மீ 1உ [பகுதி 3.

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்




பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

## ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தியளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பழத்தீவு" என்ற நாவல்கள் முடிவுபெற்று "ஞானசெல்வாம்பாள்" என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான இரண்டு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமன்றி சஞ்சிகைகள் கிடையா. "ஞானசெல்வாம்பாள்" வேண்டியவர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து சஞ்சிகை பெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்

ஒன்றும் செய்யமாட்டா யென்றே நம்புகிறேன். உன் நன்மைக்கே நான் கூறியவெல்லாம்'' என்றாள்.

செல்வாம்பாள் தன் கபட எண்ணத்திற்குத்தக்கபடி தந்திரமாக விடையளித்தாள். ஞானாம்பாள் அதைப் பூரணமாக நம்பிக்கொண்டாள். அவள் மனதில் இருந்த பெரும்பாரம் நீங்கியது போல் இருந்தது. அவள் பூரணமாக ஏமாந்து விட்டாள். அதன்மேல் அவள் சற்று நேரம் செல்வாம்பாளை விட்டுப்பிறிந்து, தானும் தேவராஜனும் ஏற்பாடு செய்துகொண்டபடி அவன் தாயாரைக் கண்டு பேசுவதற்காகச் சென்றாள்.

தேவராஜின் தாயார் தன் அந்தரங்கக்காரணங்களுக்காக வேணுமென்றே ஞானாம்பாளிடமாவது செல்வாம்பாளிடமாவது அறிமுகம் வைத்துக் கொள்ளாமலிருந்தாள். அவள் நகரத்தினருகில் வாசம் செய்யவந்ததே பிரியத்தோடல்ல. மேலான பலவந்தத்தால் அதற்குடன்பட வேண்டியதாயிற்று. தன் புதல்வன் ஞானாம்பாளை மணம் புரியப் பிரியப்படுவதாகக் கூறியதைக்கேட்டதே அதைத் தடுத்துக் கூறுவது தகுதியல்லவென்றும் வெளிப்படையாகக் கூறக் காரணமும் இல்லையென்றும் அவள் மனதிற்பட்டது. தானும் தன் புத்திரனோடு கூட நயனபுரிக்கு வருவதாகக் கூறியிருந்தாள். ஆகையால் இப்போது ஞானாம்பாளைக் கண்டு பேசுவதால் பின்னால் அவளோடு சகவாசம் செய்யவேண்டிய அவசியம் நேரிடாதென்பது அம்மாதின் நோக்கம். அதனால் ஞானாம்பாளை வரவேற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டாள்.

186499.

ஞானாம்பாள் தேவராஜின் தாயிடம் சுமார் ஒரு மணி நேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்தாள். அவள் சம்பாஷணையாலும் அடக்க ஒடுக்கம் மரியாதை முதலிய

வற்றாலும், ஞானம்பாள் மேல் அம்மாதுக்குப் பூரணப்பிரியம் உண்டாய்விட்டது.

ஞானம்பாள் சென்ற மறுகிமிடம் கனம் கிருஷ்டப்பன் சுகவிலாசத்திற்கு வந்தான். அவனுக்கு வயது இருபத்திரண்டு இருபத்திமூன்று இருக்கும். அவன் கூடிய வரையில் அழகுடையவனே. ஒழுங்காக உடையணிந்து கொள்ளுபவன். அவன் செல்வாம்பாளைக் கண்டதும் அவள் கரத்தைப்பற்றிக் கொண்டு அவளருகில் உட்கார்ந்து "என் பிரியமுள்ள காதலியே! சங்கதியை யுன் சகோதரியிடம் கூறினையோ?" என்றான்.

செல்வாம்பாள்:—ஆகா! கூறினேன். ஆனல் அவள் இதற்குச் சம்மதிக்கமாட்டாளென்று அஞ்சுகிறேன்...

கிருஷ்டப்பன்:—நீ கூறுவதைப் பார்த்தால் உன் மூத்த சகோதரியாவது அல்லது உன் மேல் அதிகாரமுடைய பெரியோர் யாராவது கூறுவது போலிருக்கிறது.

செல்வாம்பாள்:—அவள் சம்மதி யென்று நான் கூறியது, நான் இதைப்பற்றி யின்னும் சிந்தித்துக்கொண்டிருக்கிறேனென்று அவள் எண்ணிக்கொண் டிருக்கிறாள் என்பதற்கே.

கிருஷ்டப்பன் ஏதோ மிக்க மனவருத்தமும் வியாகூலமுமடைந்தவன் போல், "ஆ! என் அன்பார்ந்த காதலியே! நீ உண்மையாகவே யின்னும் இதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டா இருக்கிறாய்? என் வார்த்தையில், என் காதலில், என் சத்திய மொழியில் உனக்கு நம்பிக்கை யுண்டாகவில்லையா? நான் உன் மேல் கொண்டிருக்கும் காதல் சத்தியமானதல்லவோ..." என்று தந்திரமாகக் கூறினன்.

செல்வாம்பாள்:—ஓ! நான் உமது காதலைப் பூரணமாக நம்புகிறேன்; உமது வார்த்தைகளையும் நம்புகிறேன். நானும் உம்மேல் அவ்வாறே பூரணமான காதல் கொண்டிருக்கிறேன். என் காதல் சத்தியமானதே. உம்முடைய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் நான் நம்புகிறேன்.

கிருஷ்டப்பன்:—ஓ என் காதலியே! நீ கூடிய சீக்கிரத்தில் என் மனக்கலக்கத்தை யொழித்துவிட வேண்டும். உன் சகோதரிக்கு இது விருப்பமில்லாதவரையில் அவள் எப்படியேனும் இதற்கு இடையூறு செய்து விடவே முயல்வாள்; கலியாணம் நிறைவேறிய பின் ஒருவரும் ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் முன்னடி அவ்வாறு செய்வது சுலபம். நமது திருமணம் உன் சகோதரிக்குச் சந்தோஷமளிக்கா தென்று நன்றாய்த் தெரிகிறது. ஒரு நிமிடம் கழிவது எனக்கு ஒரு வருடம்போ லிருக்கிறது. ஆகையால் நாம் கூடிய சீக்கிரம் இரகசியமாகக் கலியாணம் செய்து கொள்வதே நலம். நாளைக்கே செய்து கொள்வதும் நலமே. ஆலசியம் ஆபத்துக் கிடமாகும். நான் அதற்கு அவசியமான குருவுத்திரவைத் துரிதமாகப்பெற்றுக்கொள்கிறேன். கலியாணமானவுடனே நேராக உன்னை யழைத்துக்கொண்டு என் தந்தை யடிகளிற் பணியவேண்டியதே தடை. என் மேலுள்ள விசேட அன்பினால் அவர் உடனே உன்னைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வார்.

இம்மொழிக ளியாவும் கேட்ட செல்வாம்பாளுக்கு இன்னும் அதிக நம்பிக்கை யுண்டாகிவிட்டது. அவன் ஏற்பாட்டின்படிக்கே யாவற்றிற்கும் ஒப்புக்கொண்டாள். ஆனால் ஒரு தடை தோன்றியது. அதாவது தான் எவ்

வாறு ஞானம்பாளுக்குத் தெரியாமல் இரகசியமாக வீட்டை விட்டு வெளிச்செல்வதென்பதே. மற்ற எல்லா ஏற்பாடுகளுக்கும் திருப்தியோடு சம்மதித்தாள்.

கபட சிந்தனையோடு மோச எண்ணம் கொண்டிருக்கும் காமுகனுக்கு எப்போதும் முன் யோசனை யிருப்பது சுபாவமே. அதுபோல் நமது கிருஷ்டப்பனும் ஏதோ யோசனை செய்துகொண்டே வந்திருக்கிறான். ஒரு சமயம் ஞானம்பாள் இதற்குச் சம்மதிக்கமாட்டாள் என்ற சந்தேகம் அவன் மனதிற்றோன்றி யிருக்கலாகும். அவன் செல்வாம்பாளை நோக்கி "நாம் இருவரும் இரகசியமாக ஏதேனுமொரு கிராமத்திற்குச் சென்று அங்கு இரகசியமாக மணம்புரிந்து கொள்ளலாம்" என்றான். அதன் மேல் இருவரும் அதைப் பற்றிய ஏற்பாடுகளைச் சிந்தித்துத் தங்களுக்குள் ஒரு வழியாகத் தீர்மானம் செய்துகொண்டார்கள். அதன் பிறகு கிருஷ்டப்பன் விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

---

## 24-வது அத்தியாயம்.

"கேடு வருமுன் மதி கெட்டுவரும்."

சகலாசத்திற்குச் சுமார் ஒருமைல் தூரத்தில் கந்தனூர் என்ற ஒரு சிறுநகரமிருக்கிறது. அதன் ஓரத்தில் சண்பகவல்லி என்ற ஒரு வயது முதிர்ந்த மாது ஒரு தனி வீட்டில் வசித்துக்கொண்டிருந்தாள். அம்மாது மரியாதையோடு நிம்மதியாய் வசிப்பவள். அம்மாது அப்போதைக்கப்போது லாயர் தம்புசாமிப்பிள்ளையின் வீட்டில் நடக்கும் விருந்து முதலியவைகளுக்குச் செல்வதுண்டு. அங்குதான் சகோதரிகள் இருவரும் அம்மாதோடு அறிமுகமானார்கள். அம்மாது தன் வீட்டில்

தான் நடத்தும் சிற்றுண்டி விருந்து முதலியவைகளுக்கு இவர்களுக்கும் அழைப்புச்சீட் டனுப்புவதுண்டு.

அம்மாது ஒருவிதப்பெருமையும் ஊர் சங்கதிகளைப் பற்றிப் பேசுவதில் மிக்க விருப்பமும் உடையவள். இத ஞல் ஞானம்பாளுக்கு அம்மாதின் சகவாசத்தில் விருப்ப மில்லை. இதுகாறும் வந்த இரண்டுமூன்று அழைப்புச் சீட்டுகளுக்கும் இவர்கள் போகவில்லை. மேற்கண்ட சம்ப வங்கள் நடந்த அதே தினம் காலை, அன்று மாலை சிற் றுண்டி விருந்திற்கு வரும்படி இருவர்க்கும் அழைப்புச் சீட்டு வந்தது. ஞானம்பாள் தான் வர அனுகூலப்பட வில்லை யென்று கூறிவிட்டாள். செல்வாம்பாள் அச்சம யம் என்ன காரணத்தாலோ ஒரு பதிலும் கூறவில்லை. கிருஷ்டப்பன் வந்து சென்றதே, செல்வாம்பாள் தான் விருந்திற்கு வருவதாக ஒரு சீட்டெழுதிச் சண்பகம்மா ளுக்கு அனுப்பினுள்.

பிறகு ஞானம்பாள் வந்தபோது, கிருஷ்டப்பன் வந்த சங்கதியைக் கூறி "ஆனல் நீ கூறிய ஆலோசனையை நான் மறந்து நடந்துகொள்ளவில்லை" என்ருள். ஞானம் பாள் இதைக்கேட்டு மனத்திருப்தி யடைந்தாள். அவள் எள்ளளவேனும் தன் சகோதரி தன்னை யேமாற்றிவிடக் கருதுகிருளென்று ஐயப்படவே யில்லை. ஆகையால் "நீ நான் கூறியபடியே நடப்பாய் என்று எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு" என்று கூறிவிட்டு வழக்கம்போலச் சித் திரத்தையல்வேலை செய்யத் தன் அறைக்குத் திரும்பினுள்.

அச்சமயம் செல்வாம்பாள், "ஆ! ஒரு சங்கதி மறந்துவிட்டேன். அதாவது அச்சண்பகம்மாள் வீட் டிற்கு மாலை விருந்திற்கு வருவதாகச் சீட்டெழுதி யனுப்பி விட்டேன். எனக்குச் செல்லவேண்டுமென்று அக்கரை யொன்றுமில்லை. ஆனல் அந்தம்மாள் இரண்டு மூன்று

முறை விருந்திற் கழைத்ததற்கும் நாம் போகவேயில்லே. இன்றைக்காவது செல்லலாமென்று என் மனம் பிரியப் பட்டது. நீவர அநுகூலமில்லேயென்று தந்திரமாகக் கார ணம் எழுதிவிட்டேன்'' என்றாள்.

ஞானம்பாள்:—"நீ கடைசியில் செல்வதாக விருந்தால் நானும்கூட வருவேனே. ஆனல் நீ அம்மாதிரி எழுதிவிட்ட பிறகு இனி நான் வருவது அசிங்கமா கத் தோன்றும்'' என்றாள்.

செல்வாம்பாள் வேடிக்கையாக அங்குபோய்ச் சற்று நேரம் காலம்போக்கினல் கிருஷ்டப்பன் விஷயமாக அவள் மனதிலுள்ள கலக்கம் ஒழிந்து அவள் மனத்தெளி வடைவாள் என்று ஞானம்பாள் கருதி மனதில் சற்று திருப்தியடைந்து "அப்படியே போய்வா'' என்றாள்.

இரவு சுமார் எட்டுமணிக்குச் செல்வாம்பாள் சண்பக வல்லியின் வீட்டிற்குச் செல்வதற்காகப் புறப்படும்போது, ஞானம்பாளே மனப்பதைப்போடு ஆலிங்கனம் செய்து கொண்டாள். ஞானம்பாள் சற்று கவனித்திருந்தால் "இதென்ன! சற்று நேரம் நம்மைவிட்டுப் பிறிந்திருக்கப் போகிறவள், ஏதோ மிக்க தூரதேசம் சென்று நெடுநாள் கழித்துவரக் கருதியவள்போல் இவ்வளவு உருக்கத்தோடு நம்மை யாலிங்கனம் செய்து கொள்வானேன்?'' என்று சந்தேகப்படலாகும். ஆனல் ஞானம்பாளோ, இவள் நமக்குக் கூருமல் அவ்வாறு நடந்துகொண்டதால் நாம் மிக்க மனவருத்தமடைந்திருப்பதாகக் கருதி அதைச் சாந் தப்படுத்தவே இத்தகைய ஆர்வத்தோடு ஆலிங்கனம் செய்துகொள்கிறளென்று கருதினள்.

செல்வாம்பாள் ஒரு வண்டியிலேறிச் சண்பகவல்லியின் வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கையில் அவளே யறியா மலே அவள் கண்களில் நீர் வடிந்தது. அவள் "சே! நாம்

கோழைத் தனமாக நடந்துகொள்ளலாகாது. நமது க்ஷேமாபி விர்த்தியை நாம் கவனிக்கவேண்டும் என்று தன் மனதையொருவாறு தேற்றிக்கொண்டாள். ஞானம்பாள் வீட்டில் தனியே யிருந்தாள்.

செல்வாம்பாள் "சே! நாம் இப்போது தைரியத்தோடு நடந்துகொள்ளவேண்டும். கலியாணம் முடிந்து உலகே சம்பிரபு நம்மை மருமகளாக ஏற்றுக்கொண்ட பிறகு நமது சகோதரிக்குச் சமாதானம் கூறினுல் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வாள்" என்று தன் மனதிற்குத் தானே திருப்திசெய்து தைரியங் கூறிக்கொண்டு, அவ்வீடு போய்ச் சேருவதற்குள் தன் முகவிகாரத்தை மாற்றிச் சாதாரணமாகச் சந்தோஷத்தோ டிருப்பவள்போல் ஆய் விட்டாள்.

அன்றையதினம் சண்பகவல்லி வீட்டில் பனிரண்டு பேர்களே வந்திருந்தார்கள். வயது முதிர்ந்த மாதர்கள் சொக்கட்டானுடிக்கொண் டிருந்தார்கள். வாலிப மாதர்கள் சங்கீதத்தில் காலத்தைக் கழித்துக்கொண் டிருந்தார்கள். செல்வாம்பாள் தன் மனதிலிருந்த கலக்கத்தை யடியோடடக்கிக்கொண்டு யாவரிலும் மிக்க குதூகலத்தோ டிருப்பவள்போல் நடித்துக்கொண்டிருந்தாள். காலம் கழியக் கழிய அவள் கடியாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டே யிருந்தாள். கடைசியில் மணி பதினென்றடித்தது. உடனே மற்றபேர் ஒருவரும் தன்னைக் கவனிக்காத சமயம் பார்த்துத் தன் போர்வையை யெடுத்துக் கொண்டு பின் வழியே நுழைந்து தோட்டத்திற் சென்று தோட்டத்தின் பின் பக்கமிருந்த ஒரு சிறு வழியாய் வெளிப்பட்டுப் பின்னுலிருந்த சந்திற்குச் சென்றுள்.

அச்சமயம் அங்கு ஒரு வண்டி நின்றுகொண்டிருந்தது. செல்வாம்பாள் வண்டி யருகில் சென்றதும் அதற்

குள் இருந்த கனம் கிருஷ்டப்பன் கீழிறங்கிச் செல்வாம் பாளை வண்டியிலேற்றித் தானும் ஏறிக்கொண்டான். உடனே வண்டி வடக்குதிக்கை நோக்கித் துரிதமாகப் புறப்பட்டது.

அச்சமயம் அவள் மனதில் எரிவேல் பாய்ந்தது போல் ஒரு பெரிய வேதனை யுண்டாயிற்று. அச்சமயம் மட்டும் யாரேனும் அவளைத் தடுத்திருந்தால் அத்தகைய தகாத மார்க்கத்தில் பிரவேசியாமல் அவளைக் காப்பாற்றி யிருக்கலாம். அத்தகையோர் ஒருவருமில்லை. வண்டி யின் உள்ளே பார்த்தாள். கிருஷ்டப்பன் கூறி யிருந்த படி தனக்குப் பெண் துணையாக ஒருவரும் அழைத்து வரப்படவில்லை யென்று தெரிந்தது. உடனே அவள் துயரம் அடக்கக்கூடாததாய்விட்டது.

அதைப்பற்றித் தன் காதலனைக்கேட்டபோது அவ் வஞ்சகன் "அந்தோ! அதே என் மனதிற்கு மிக்க வியா கூலத்தை யுண்டாக்கிவிட்டது. நான் ஏற்பாடு செய்த மாது கடைசி சமயத்தில் என்னை மோசம் செய்துவிட் டாள். ஆ! நீ ஏன் கண்களில் நீர் விடுகிறாய். அப்படி யானால் என்னிடம் உனக்கு நம்பகமில்லையா? அந்தோ என் உண்மையையும் எனக்கு உன்மேலிருக்கும் சத்திய மான அன்பு எத்தகைய தென்பதையும் நீ உணரவில்லை போலும். ஆ! நான் அப்படிக்கருதவில்லை!" என்று மிக்க மனத்தாபமடைந்தவன்போல் அபிநயித்தான். உலக விவ காரங்களை யறிந்த கபட நெஞ்சனாகிய ஒருவன், சூதாவது, உலக அனுபவமாவது தெரியாதவளும், செல்வம் பொருந் திய பதவியையும், உலக இன்பங்களையும் அடைய ஆவ லுள்ளவளுமாகிய ஒரு கன்னிகையை நயவஞ்சனையால் மயக்கி விடுவது எவ்வளவு சுலபம்.

கிருஷ்டப்பனுடைய வஞ்சக மொழிகளைக்கேட்ட செல்வாம்பாள் தன் கலவரம் துயரம் யாவற்றையும் மறந்து தான் அவனைப் பூரணமாக நம்புவதாய் வெளி யிட்டாள். விவகாரம் அவ்வளவு தூரம் சென்றுவிட்ட பின் அத்தகைய நம்பகத்தால்தான் அவள் மனோ தைரிய மடையவேண்டும். வேறு வழியில்லை. தான் கடைசி வரையில் அவளை யேமாற்றி விடலாம் என்று அவனுக் குள் நிச்சயமிருந்தது. ஆகையால் மிக்க நெறியான நடக்கை யுடையவன்போல் அபிநயித்துக்கொண் டிருந் தான்.

இவர்கள் ஏறிச்சென்ற வண்டி வேகமாகச் சென்ற தால் இரவு ஒருமணி வேளைக்கு சுமார் பதினைந்து மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய நகரம் போய்ச் சேர்ந்தார்கள். குளிர்காலமானதால் குளிர் அதிக கடுமையாகவிருந்தது. ஆகையால் கிருஷ்டப்பன் கூறியபடி இருவரும் அங்கி ருந்த ஒரு ஹோட்டலில் இளைப்பாறத் தங்கினார்கள்.

சகவிலாசத்தில் தனியாக விருக்கும் ஞானம்பாள் போஜனம் முடிந்ததும் ஒன்பது மணிக்குமேல் தன்சகோ தரிவருந்தனிலும் தையல் வேலைசெய்யலாம் எனக் கருதி அவ்வாறே செய்யத்தொடங்கினாள். பத்துமணியாயிற்று. வேலைக்காரி தன் அறைக்குச் சென்றாள். ஞானம்பாள் பதினொருமணி வரையில் தைத்துக்கொண்டேயிருந்தாள். இன்னும் செல்வாம்பாள் வரவில்லை. ஆச்சு வந்துவிடுவாள், இன்னும் இரண்டொரு நிமிடங்களில் வந்து விடுவாள் என்று பொறுமையாகவே யிருந்தாள். மணிபனிரண்டா யிற்று. அப்போது தான் ஞானம்பாள், "அவள் வர வேண்டிய வேளையாயிற்றே! ஏன் இன்னும் வரவில்லை?" என்று கருதினாள். போகப்போக அவளுக்கு மனப் பதைப் புண்டாயிற்று. அவள் வரும்வரையில் விழித்துக்

கொண்டே யிருக்கத் தீர்மானித்தாள். கடைசியில் மணி ஒன்றடித்தது.

அப்போதுதான் ஞானம்பாள் மனதில் பீதியுண்டாயிற்று. ஆயினும் தன் சகோதரி தனக்குத்துரோகம் செய்துவிட்டுப் போய்விடுவாளென்று அப்போதும் அவள் மனதிற்படவில்லை. செல்வாம்பாள் மிக்க கேளிக்கையா யிருப்பவளாதலால் சண்பகவல்லி யவளைச் சீக்கிரம் அனுப்ப விருப்பமில்லாம லிருக்கலாம் என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக் கொண்டாள். பின்னும் சற்றுநேர மாயிற்று. ஒருவேளை போஜனம் நேரங்கழித்து நடந்ததாக்கும் என்று கருதினாள்.

மணி இரண்டடித்தது. ஞானம்பாள் அதற்குமேலும் தன் மனதிற்குச் சமாதானம் கூற முடியவில்லை. அவளுக்குப் பெருந்திகிலும் கலவரமும் உண்டாயிற்று. "அவளுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்ததாக்கும். அப்படியிருந்தால் சண்பகவல்லியம்மாள் நமக்குச் சங்கதிதெரிவிக்க வேண்டுமே" என்று கலவரமடைந்தாள். கடைசியில் மணி மூன்றாய்விட்டது. உடனே இராஜம்மாளை யழைத்து தன் மனக் கலக்கத்தை யறிவித்தாள். அவள் மனதில் ஏதோ ஒருவிதமான ஆபத்து நேர்ந்ததுபோல் திகிலுண்டாய் விட்டது.

இராஜம்மாள் இரண்டு சகோதரிகள் மேலும் மிக்க விசுவாச முடையவள். ஆகையால் ஞானம்பாள் கூறியவற்றைக் கேட்டதே அவள் மிக்க வியாகூலமுற்றுத் தான் போய் விசாரித்து வருவதாகக் கூறிவிட்டுச் சண்பகவல்லி வீட்டிற்குச் சென்றாள். அவள் சென்று திரும்பிவருவதற்குள் ஞானம்பாள் நரகவேதனையடைந்தாள். அவள்மனம் கருங்கல்போல் ஆகிவிட்டது.

இராஜம்மாள் திரும்பி வந்தபோது அவள் முகத்தில் திகிலும் துயரமும் கலவரமுமான பெரிய விகாரமுண்டாயிருந்தது. அவள் வந்ததும் கண்ணீர் விட்டுக்கொண்டே ஞானம்பாளை நோக்கி "அய்யோ! செல்வாம்பாள் சுமார் பதினொருமணிக்கே யாருக்கும் சொல்லாமல் வந்து விட்டாளாம். போசனத்திற்குக் கூட இராமலும் தன்னிடமாவது வேறு யாரிடமாவது ஒரு வார்த்தையும் கூறாமலும் வந்துவிட்டதால் அவள் ஏதோ கோபமடைந்து அப்படிப் போய்விட்டாளென்று சண்பகவல்லியம்மாள் மிக்க வியாகூலப் படுகிறார்கள்" என்றாள்.

இதைக் கேட்டதே ஞானம்பாள் பேரிடி விழுந்தவள்போலாய்விட்டாள். சற்றுநேரம் அதிக வியாகூலத்தால் அவள் மனம் பெருங் குழப்பமாகவே யிருந்தது. பிறகு அவள் மனதில் மெதுவாக ஒரு சந்தேகம் உதித்தது. செல்வாம்பாள் சண்பகவல்லி வீட்டிலிருந்து யாருக்கும் தெரியாமல் இரகசியமாக வெளிப்பட்டாள் என்றவரையில், அவள் ஒருவரால் பலவந்தமாகப் பிடித்துக்கொண்டு போகப்படவில்லையென்று தெரிந்தது. கிருஷ்டப்பனை யவள் இரகசியமாக மணம்புரிவதை வேண்டாமென்று தான் தடுத்ததே அவள் சென்றதற்குக்காரணமாக விருக்குமோவென்று கருதினாள். ஆம் அப்படித்தான் இருக்கவேண்டுமென்று அவள் மனதிற் புலப்பட்டது.

இராஜம்மாள் தன் எஜமாட்டியின் மனதில் என்ன சிந்தனை யிருக்கிறதென்றறிய ஆவல்கொண்டு அவள் முகத்தையே உற்று நோக்கியபடி யிருந்தாள். ஆனால் அச்சமயம் அவசரப்பட்டுத் தன் அபிப்பிராயத்தை வெளியிட ஞானம்பாளுக்குப் பிரியமில்லை. ஏனெனில் ஒரு

சமயம் அது தவறுகிவிட்டால் தானே ஆத்திரப்பட்டு தன் சகோதரியை அகௌரவப் படுத்தியதாகும்.

காலை ஏழுமணிக்குச் சண்பகவல்லியே சுகவிலாசத்திற்கு வந்தாள். அவள் கீழ்க்கண்டபடி ஞானம்பாளிடம் கூறினாள்:—

"குழந்தாய் இந்த விஷயத்தைப் பற்றி என்மனம் மிக்க வேதனை யடைகிறது. செல்வாம்பாள் பதினொரு மணிவரையில் சந்தோஷமாகவே காலம்போக்கிக்கொண்டிருந்தாள் பதினொன் றடித்ததும் வேலைக்காரரனைவரும் போஜனசாலையில் ஆகாரம் வட்டிக்கும் வேலையிலிருந்தார்கள். விருந்தின ரனைவரும் அவரவர்கள் கேளிக்கையிலிருந்தார்கள். அச்சமயம் செல்வாம்பாள் எப்படியோ நழுவி, தோட்ட வழியே சென்றுள் போலும். பின்னல் ஆராய்ச்சி செய்தபோது, தோட்டத்திற்குச் செல்லும் கதவு திறக்கப்பட்டிருந்த தென்று தெரிந்தது. போஜன வேளையில் எங்கு தேடிப்பார்த்தும் செல்வாம்பாள் காணப்படவில்லை. எப்படியோ எதற்காகவோ கோப மடைந்தே இவள் போய்விட்டாளென்று நான் கருதினேன். ஆயினும் நமக்குக்கூறுமல் போய்விட்டாளே யென்று என் மனதில் மிக்க வியாகூல முண்டாயிற்று

பிறகு நான் நித்திரை செய்துகொண் டிருந்தபோது உனது வேலைக்காரி வந்து செல்வாம்பாள் இன்னும் வீடு வந்து சேரவில்லை யென்றும் நீ மிக்க மனோவேதனைப்பட்டுக்கொண் டிருப்பதாகவும் கூறினாள்.

அதைக்கேட்டதும் "ஓகோ இதில் என்னமோ மர்மமான விசேஷமிருக்கிற தென்று என்மனதிற் பட்டது. விடிந்ததும் நான் இதைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினேன். அந்தப் பிரதேசத்தில் இரவில் காவலிருக்கும் போலீஸ்காரன் நமது வீதியில்தான் நிற்பது. அவனை

விசாரித்தபோது சங்கதி இன்னதென்று தெரிந்தது. இரவு சுமார் பதினோருமணிக்கு நமது வீட்டின் பின்பக்கம் தோட்டத்தின் ஓரமாகச் செல்லும் சிறுசந்தில் ஒரு குதிரைவண்டிவந்து நின்றதாம். விருந்திற்கு வந்தவர்களது சகடங்களனைத்தும் முன்புறம் வீதியிலிருக்க இவ்வண்டிமட்டும் அந்நேரத்திற்கு வந்து பின்பக்கம் இருக்கும் சந்தில் இருட்டில் நிறுத்தப்படுவானேன் என்று அந்தப் போலீஸ்காரனுக்கு ஏதோ ஒருவித சந்தேகம் உண்டாகவே, அதென்னதான் பார்ப்போமென்று வண்டியிருக்குமிடத்திற்குச் சுமார் இருபது கெஜதூரத்திலிருந்த ஒரு பெரியமரத்தின் மறைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டொரு நிமிடங்களுக்குள் ஒரு கன்னிகை நமது தோட்டத்தின் மதில் சுவரிலிருந்த சிறு கதவைத் திறந்துகொண்டு வெளிவந்து வண்டியினருகிற் சென்றாள். உடனே வண்டியின் கதவு திறக்கப்பட்டதும் ஒருவாலிபன் கீழிறங்கி அக்கன்னிகைக்குக் கைலாகு கொடுத்து அவளை வண்டியிலேற்றி யுடனே தானும் ஏறிக்கொண்டான். வண்டி யுடனே வேகமாக வடக்கே செல்லும் இராஜபாட்டையின் வழியாகச் சென்றது. இவ்வளவு விஷயமும் அந்தப் போலீஸ்காரன் நேரில் நின்று பார்த்தானாம். அவ்வாலிபன் யாரென்று கேட்டேன். போலீஸ்காரன் அவனுடைய முகத்தை நன்றாய்ப் பார்க்கக்கூடவில்லையென்று அவன் அடையாளங்களை மட்டும் கூறினான்" என்று அம்மாது அவ்வாலிபனுடைய நடையுடை பாவனைகள் யாவும் போலீஸ்காரன் கூறியபடித் தெளிவாகக் கூறினாள்.

இவையாவும் கேட்ட ஞானம்பாள் மனம் என்ன வேதனையடைந் திருக்கும் என்பதைப்பற்றி இதை வாசிப்போரே சிந்திக்கலாம். அவளுடைய சந்தேக மனைத்தும்

இப்போது உண்மையாய் விட்டது. ஆனல் சண்பகவல்லி யிடம் தன் சகோதரியைப் பற்றி அகௌரவமாகக் கூற மனம் பிடிக்காது. அவள் கனம் கிருஷ்டப்பனை மணம் புரிந்து கொள்ள விரும்பியதையும், இரகசியமாக மணம் புரிவதற்குத் தான் சம்மதியாததையும் கூறி, இப்போது அவள் கிருஷ்டப்பனை மணம்புரிந்து கொள்ளவே சென் ருள் என்று கூறினுள்.

சண்பகவல்லி சென்றதும் ஞானும்பாள் இராஜம் மாளை யழைத்து எல்லாச் சங்கதிகளையும் வெளியிட்டாள். இராஜம்மாள் மிக்க வியாகூலமடைந்து "அடடா இவள் ஏன் இதற்காக ஓடிவிடவேண்டும்! பகிரங்கமாகவே தன் னிஷ்டப்படி யவனை மணம்புரிந்து கொள்ளலாமே" என்று தனக்குள் கருதிக்கொண்டாள்.

செல்வாம்பாள் சென்றது இன்னவிடத்திற்கு என்று தெரிந்தால் ஞானும்பாள் உடனே அவளைத் தொடர்ந்து செல்வாள். வண்டி வடக்கு நோக்கிச் சென்றதென்று மட்டுமே தெரிகிறது. பிறகு எத்திக்கில் வேண்டுமாயினும் திரும்பிவிட்டாலும் ஆலசியமின்றிமணம் புரிந்துகொண்டு உடனே தனக்கு அவள் இருப்பிடத்தைத் தெரிவித்து விடுவாளென்று தன் மனதை யொருவாறு தேற்றிக் கொண்டாள்.

---

## 25-வது அத்தியாயம்.

### நீலாட்சியின் வஞ்ச ஆரம்பம்.

மறுநாள் காலேயே செல்வாம்பாள் உலகேசம் பிரபு வின் புத்திரனுகிய கனம் கிருஷ்டப்பனேடு ஓடி விட்டாள் என்றவதந்தி சுற்றுப்பக்கங்களில் எங்கும் பரவி விட்டது. ஞானும்பாளுக்குச் சகிக்கொணுத அவமான

மாக விருந்தது. ஆகையால் அவள் தற்சமயம் ஒருவரையும் காணக்கூடாதென்று தீர்மானித்துக்கொண்டு தன் அறையை விட்டு வெளிவராதிருந்தாள். யார் வந்து அவளைக் காணவேண்டுமென்றாலும் இராஜம்மாள் இப்போது ஒருவரையும் காணமாட்டார்கள் என்று கூறியனுப்பிக்கொண் டிருந்தாள்.

இச்சங்கதி தேவராஜுக்கும் அவன் தாயாருக்கும் எட்டியதே அவர்கள் மிக்க வியாகூல மடைந்தார்கள். தேவராஜு தான் உடனே சென்று ஞானம்பாளுக்குத் தேறுதல் கூறவேண்டுமென்று கருதினான். ஆனால் அவன் தாயார் "இப்போது முதலில் நீ செல்வது சரியல்ல. நானே சென்று அவளுக்குத் தேறுதல் கூறிவருகிறேன். பிறகு நீ செல்லலாம்" என்று கூறிவிட்டு, அவ்வாறே சென்றாள். ஆனால் இராஜம்மாள் யாவர்க்கும் சொல்லியனுப்புவதுபோல் அம்மாதிற்கும் இப்போது காண முடியாதென்று கூறி யனுப்பிவிட்டாள். இச்சங்கதியை ஞானம்பாள் கேட்டபோது தனக்கும் தேவராஜுக்கும் நடந்திருக்கும் விவகாரத்தால், தான் அவன் தாயாரைக் காண மறுத்தது தவறென்றுணர்ந்து வேலைக்காரி தவறாக அப்படிச் செய்துவிட்டாளென்றும் அதற்காகத் தன்னை மன்னிக்கவேண்டுமென்றும், நடந்த சங்கதி இன்னின்ன மாதிரி யென்றும் உடனே தேவராஜின் தாயாருக்கு ஒரு கடிதம் வரைந்தனுப்பினாள்.

அதே தினம் பிற்பகல் நீலாட்சி ஞானம்பாளைக் காணவந்தாள். இராஜம்மாள் அவளுக்கும் மற்றபேர்களுக்குக் கூறியதுபோன்றே கூறினாள். ஆனால் அவள் "இத்தகைய சமையத்தில்தான் நான் கிட்ட விருந்து தேறுதல் கூறவேண்டும். ஆகையால் உண்மையான சிநேகி செய்யவேண்டிய கடமையை நான் செய்யாவிட்

டால் நான் சிநேகி யென்றே கருதப்படமாட்டேன் என்று கூறு'' என்றாள்.

ஞானம்பாள் அதற்குமேல் அவளைக்காண மறுப்பது ஒழுங்காக இருக்கவில்லை. நீலாட்சி ஞானம்பாளுக்குத் தேறுதல் கூறினாளெனினும் பூரணமான நம்பிக்கை கூற வில்லை. அவளுக்குக் கிருஷ்டப்பனைப்பற்றி யொன்றும் தெரியாதாயினும் தன் சுய அநுபவத்தால் அச்சுதன் விஷயமாகத் தான் துன்பப்பட்டிருப்பதால் செல்வாம் பாள் கதியும் அப்படித்தான் முடியுமோவென்று அவள் மனதில் மிக்க சந்தேகமுண்டாகி யிருந்தது. அதனாற் றான் ஞானம்பாளுக்கு வீண் நம்பிக்கை கூற அவள் மனம் சம்மதிக்கவில்லை.

ஆயினும் ஒருவாறு தேறுதல் கூறி "ஞானம்பா! நீ யித்தகைய மனோ வேதனையிலிருப்பதால் நீ என்னை யுன் உண்மைச் சிநேகியாகவும் துணைவியாகவும் ஏற்றுக் கொண்டு இரண்டு மூன்று நாட்களுக்கு நான் உன் கூடவே யிருக்கும்படி அநுமதி யளிக்கவேண்டும்'' என்றாள்.

ஞானம்பாளின் மனம் அச்சமயம் இருந்த நிலைமை யில் தனக்கு ஒரு துணை வேண்டியது அவசியமே யென்று அவள் மனதிற்பட்டது. ஆகையால் அவள் அதற்குச் சம்மதித்தாள். நீலாட்சி வரும்போதே எப்படியாவது ஞானம்பாள் வீட்டிலேயே இரண்டுமூன்று நாட்கள் இருக்கவேண்டும் என்ற தீர்மானத்தோடு வந்தாளாத லால் தன் உடுப்புப் பெட்டியை யங்கு கொண்டுவரும்படி தன் வேலைக்காரனிடம் கூறிவிட்டு வந்தாள். அதன் படிக்கே மாலைப்போதுக்குள் அவள் உடுப்புப்பெட்டி அங்குவந்து சேர்ந்தது. அவளுக்காக ஞானம்பாளின் அறைக்குப் பக்கத்திலிருந்த அறை ஏற்பாடு செய்யப் பட்டது.

இரவுபோசனம் முடிந்தபின் இரண்டு கன்னிகைகளும் நெடுநேரம் ஞானம்பாளின் அறையிலேயே யுட்கார்ந்து சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். மணி பதினென்றடித்ததும் நீலாட்சி சயனித்துக்கொள்ளத் தன் அறைக்குச் சென்றாள். அறைக்குள் சென்றதும் அவள் செய்யத் தொடங்கிய செயல்கள் மிக்க அதிசயமானவைகளாகவிருந்தன. அவள் தன் உடையைக் களைந்துவிட்டுச் சயன உடை யணிந்துகொள்ளவில்லை. தன் அறையின் கதவை மூடித்தாளிட்டுக்கொண்டு தன் பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்து இரண்டு கைத் துப்பாக்கிகளை யெடுத்து அவற்றைக் கெட்டித்துத் தன் தலையணைக்கீழ் வைத்துவிட்டுத் தன் கைக்கடியாரத்தைப் பார்த்தாள்; மணி பதினென்றரையாயிற்று "சரி, அது சரியாக நடு இரவிற்கு நடக்கப்போகிறது. இன்னம் அரைமணிநேரமிருக்கிறது" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு அறையிலிருந்த தீபத்தை யணைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ சிந்தனையி லிருந்தாள்.

இப்போது நாம் அவளை யங்கேயே விட்டுவிட்டு வெளியில் என்ன நடக்கிறது பார்ப்போம். சுக விலாசத்தைச் சேர்ந்த தோட்டத்தின் பின்னால் ஒரு சந்து இருக்கிறது. அதன் இரு புறங்களிலும் வேலிகள் உண்டு. மணி பனிரண்டடிக்கச் சுமார் கால்மணி நேரம் இருக்கையில், அச்சந்தில் ஒரு குதிரைவண்டி வந்து நின்றது. அதிலிருந்து இருவர் கீழிறங்கியதும், அவர்களில் ஒருவன் சாரதியை நோக்கி "நீ வண்டியை யோட்டிக் கொண்டு போய்ப் பாதையிலேயே சுற்றிக்கொண்டிருந்து சரியாகப்பனிரண்டு மணிக்கு இதே யிடத்தில் வந்திரு" என்று கட்டளையிட்டான். சாரதி யுடனே வண்டியை யோட்டிக் கொண்டு சென்றான்.

கீழிறங்கிய இருவரும் சுகவிலாசத்தின் தோட்டச் சுவரிலுள்ள கதவைத் திறக்க முயன்றார்கள். ஆனால் அது உட்பக்கம் பூட்டப்பட்டிருக்கிறதென்று உணர்ந்தார்கள். உடனே இருவரும் அச்சுவரின் மேலேறித் தோட்டத்திற்குள் இறங்கி வீட்டை நோக்கிச் சென்றார்கள். நேயர்களே! இவர்கள் யாரென்று நீங்கள் கலக்க முறவேண்டாம். துஷ்ட சிகாமணியாகிய கனம் அச்சுதனும் அவனுடைய வேலைக்காரனுமே. அச்சுதன் கொஞ்ச காலமாக ஞானம்பாளைக் கள்ளத் தனமாகப் பிடித்துக் கொண்டுபோய்ப் பதினைந்து மைல் தூரத்திலுள்ள ஒரு தனி வீட்டில் வைத்து எப்படியாவது அவள் கற்பையழித்து விட்டால் பிறகு அவள் இனி விதியில்லையென்று தனக்கு வைப்பாட்டியாக இருந்து விடுவாள் என்று கருதி அதற்காக ஆலோசனை செய்துகொண் டிருந்தான். செல்வாம்பாள் ஓடி விட்டதாக அன்று காலை கேள்விப்பட்டதே, "இதுதான் தக்க சமயம், இன்னும் ஆலசியம் செய்தால் நாளை முதலே யாரேனும் அவளுக்குத் துணையாக வந்து சேர்வார்கள்" என்று கருதி அன்றே தன் தீய எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தீர்மானித்தான். இது காறும் செல்வாம்பாளிருந்தது அவனுக்குப் பெரிய இடையூறாக விருந்தது.

அச்சுதன் கூடவந்த வேலைக்காரனுக்கு வயது முப்பத்தைந்திருக்கும். அவன் பணத்திற்கு எத்தகைய அயோக்கிய காரியத்தையும் செய்யத்துணிவான். இருவரும் வீட்டை நோக்கிச் செல்லும்போது அச்சுதன் தன் ஆளை நோக்கி "சொக்கா! நான் கூறிய ஏற்பாடு சரியாக நினைவிலிருக்கிறதா?" என்றான்.

சோக்கன்:—"ஆகா! நன்றாய் நினைவிருக்கிறது. ஒரு பெண்ணைத்தூக்கிக்கொண்டு வருகிறது ஒரு பெரிய

காரியமல்ல எஜமானே. ஆனால் அக்கன்னிகை கூச்சலிட்டு வீட்டிலுள்ள மற்றபேரை யெல்லாம் எழுப்பி விடாமல் தாங்கள் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும்'' என்றான்.

அசுச்தன்:-"அதைப்பற்றிக்கலக்கம் வேண்டாம். முகர்ந்த வுடனே மூர்ச்சையடையும் திராவகம் இருக்கிறவரை யில் அதற்கொரு சந்தேகமும் வேண்டாம். அந்தத் திராவகத்தைக் குட்டையில் நனைத்து நான் சர்வா யத்தமாக வைத்துக்கொண் டிருக்கிறேன். ஆனால் திடீலென்று வேலைக்காரியாவது இன்னும் யாராவது நம்முன் வந்து விட்டால்........

சொக்கன்:—"அதற்குத் தாங்கள் அஞ்சவேண்டாம். நான் உடனே அந்த வேலைக்காரி மேல் பாய்ந்து அவள் வாய்திறவாதபடி அவள் தொண்டையைப் பிடித் துக்கொள்வேன். அதற்குள் தங்கள் வேலை முடிந்து விடவேண்டும்.'' என்றான்.

அச்சுதன்—"நீ மட்டும் ஜாக்கிரதையாக நடந்துகொண் டால் எல்லாம் சரியாகவே நிறைவேறும். இனி யுன் முகமூடியை யணிந்துகொள்'' என்றான்.

சொக்கன் உடனே தன் முகமூடியை யணிந்து கொள்ள இருவரும் வீட்டருகிற்சென்றார்கள். அப்போது மேல்மாடியில் ஒரு அறையில் மட்டும் மங்கலான தீபப் பிரகாசம் தெரிந்தது. அச்சுதன் அதுதான் ஞானம்பா ளின் சயன அறை யென்று தெரிந்து கொண்டான்.

இருவரும் வீட்டின் பின் பக்கம் சென்று அங்கிருந்த கதவைத் திறக்கப்பார்த்தார்கள். அது உட் பக்கம் தாளி டப்பட் டிருந்தது. இவர்கள் அத்தகைய இடையூறுகளுக் கெல்லாம் ஆயத்தமாகவே வந்தார்கள். அதாவது பூட் டைத்திறக்க, அல்லது அடியோடு பெயர்த்துவிட, பல

கையை யறுக்க, கண்ணுடியை யறுக்க, இத்தகைய வேலை களுக்கெல்லாம் கள்ளர் உபயோகிக்கும் ஆயுதங்களைக் கையில் கொண்டுவந் திருந்தார்கள். அதனுல் உடனே ஒரு சிறு அரத்தை யெடுத்துக் கதவில் தாழ்ப்பாளுக்குப் பக்கத்திலுள்ள பாகத்தில் கை நுழையும்படியான அள விற்கு வட்டமாய் அறுத்தெடுத்து விட்டுக் கையை விட்டுத் தாளை இழுத்துவிட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே பிரவேசித்தார்கள்.

வீட்டிற்குள் யாவரும் நித்திரையிலிருந்ததால் சற் றும் சந்தடியில்லை. எங்கும் தீபமுமில்லை. ஆகையால் அச்சமின்றிக் கூடத்தின் வழியாகச் சென்று மேல் மாடிக் குச்செல்லும் படிகளின் வழியாகப் பூனைகள்போல் மெது வாய் ஏறினுர்கள். மேலுள்ள தாழ்வாரத்தில் பிரவேசித்து ஞானம்பாள் அறையருகிற் சென்றுர்கள். அங்கு ஒரு பெரிய தடையிருக்கிறது. அது அனுகூலமாக விருந்தால் தான் இவர்கள் காரியம் அனுகூலமாகும்; இன்றேல் பேசாமல் திரும்பி வந்து விடவேண்டியதே. சந்தர்ப்பப் படி பார்த்துக் கொள்ளலாமென்று அச்சுதன் துணிந்து வந்தான். அதென்ன இடையூறெனில் ஞானம்பாளின் அறை யுட்பக்கம் தாளிடப்பட்டிருந்தால் இவர்கள் உள்ளே பிரவேசிக்க முடியாது.

அச்சுதன் மெதுவாய் அடிமேலடி வைத்து ஞானம் பாள் அறையின் கதவை மெதுவாகத்தொட்டுப் பார்த் தான். அவன் மனம் சந்தோஷத்தால் பொங்கியது. இனி நமது காரியம் நிறைவேறிய மாதிரியே என்று சந்தோஷ மடைந்தான். ஏனெனிலோ கையை வைத்துக் கொஞ்சம் அழுத்தியதே கதவு தாளிடப்படவில்லை யாதலின் நகரத் தொடங்கியது. கதவைக்கொஞ்சம் திறந்ததும் அச்சுதன் மெதுவாய் எட்டிப்பார்த்தான். உள்ளே தீபம் மங்கலாக

எரிந்துகொண் டிருந்தது. ஞானம்பாள் தன் மஞ்சத்தில் படுத்து நித்திரை செய்துகொண் டிருக்கிறாள். அச்சுதன் கரத்தில் சமோகினி (குளோரோபாரம்) என்ற விஷத் திராவகம் நனைத்த குட்டையை யெடுத்துக்கொண்டு மெது வாய்ப் பூனைபோல் மஞ்சத்தை நோக்கிச் சென்றான்.

அச்சமயம் பின்னால் சென்ற சொக்கன் அறையி லிருந்த சாமான் எதுவோ தடுக்கித்தடாலென்று கீழே வீழ்ந்து துரிதமாகவே யெழுந்தான். ஆயினும் அச்சந் தடியால் நித்திரை செய்துகொண்டிருந்த ஞானம்பாள் விழித்துக்கொண்டாள். அவள் முகமூடி யணிந்த இரண்டு ஆட்களைக் கண்டதே பெருந்திகிலடைந்து உடனே வாய் திறக்க முடியாமல் திப்பிரமை யடைந்தாள். அதைக்கண் டதே அச்சுதன் துரிதமாகச்சென்று அவள் கடைசியில் கூச்சலிட வாய்திறக்கும் சமயம் விஷம் தோய்த்த குட் டையை யவள் வாயில் சொருகியதும் அவள் ஸ்மரணை யிழந்து படுக்கையில் வீழ்ந்து விட்டாள்.

அச்சுதன் ஞானம்பாளைத் தூக்கக்கரங்களை நீட்டும் சமயம் அவன் வேலைக்காரனாகிய சொக்கன் ஆ! வென் றலறினான். அச்சுதன் திடுக்கிட்டுச் சட்டென்று திரும்பிப் பார்த்ததும் முதலில் யாரோ ஒரு ஸ்திரீ அறைக்குள் வந் திருப்பதைக் கண்டான். மறுவினாடி அந்த ஆள் நீலாட்சி யென்றும் அவள் தன் இருகரங்களிலும் இரண்டு கைத்துப் பாக்கிகளை வைத்துக்கொண்டு தங்கள் இருவர்க்கும் நேராக நீட்டிக்கொண் டிருக்கிறாளென்றும் தெரிந்து கொண்டான்.

ஞானம்பாள் மூர்ச்சை யடைந்திருப்பதை நீலாட்சி உடனே யறிந்துகொண்டதும், தான் நடந்து கொள்ள வேண்டியது இம்மாதிரி யென்று தனக்குள் தீர்மானித் துக்கொண்டு கதவை மூடிவிட்டு இருகரங்களிலும் துப்

பாக்கிகளை நீட்டி இருவருக்கும் நேராகப் பிடித்துக் கொண்டு, சொக்கனை அறையின் ஒரு பக்கம்போய் நிற்கும்படி சமிக்கைசெய்தாள். அவன் அவ்வாறே தலை குனிந்தபடி சென்றான். நீலாட்சி யுடனே அச்சுதனை நோக்கி,

"அய்யா கனம் அச்சுதம்பிள்ளை யவர்களே! அதோ மேஜைமேல் எழுதுகருவிக ளிருக்கின்றன. இன்று முதல் பத்து நாட்களுக்குள் தாங்கள் என்னை மணம்புரிந்து கொள்வதாக நான் கூறுகிறபடி சத்தியவாக்கு எழுதிக் கொடும். இன்றேல் சற்றும் யோசிக்காமல் ஒரு நாயைச் சுடுவதுபோல் சுட்டு விழ்த்திவிடுவேன்" என்றாள்.

அச்சுதன் நீலாட்சியை நோக்கினான். அவள் முகம் வெளுத் திருந்தாலும் மிக்க தீட்சணியமும் துணிகரமு மான பார்வையோ டிருப்பதைக்கண்டு திகிலடைந்தான். நீலாட்சி "ஆலசியம் செய்தால் சுட்டுவிடுவேன்; சீக்கிரம்! ஞானம்பாள் விழித்துக்கொண்டாலோ பிறகு ஒரு பயனு மில்லையாதலால் கள்ளரை யுடனே சுட்டு வீழ்த்திவிடு வேன்" என்றாள்.

அச்சுதன் சிந்தித்தான். தாங்கள் இருவரும் கதவை யறுத்து உள்ளே வந்ததும் முகமூடியணிந்துகொண்டிருப் பதும் தங்களைக் கள்ளரென்று ருசுப்படுத்தி விடும். அதோடு விஷத்தில் தவைத்த குட்டையிருப்பதொன்று. ஆகையால் கள்ளரென்று கருதி தங்களைச் சுட்டுவிட்டால் அவர்களுக்கு ஒரு தண்டனையும் விதிக்கப்படாது. ஆகை யால் ஆலசியம் செய்வது மோசமாய் முடியுமென்று பேசாமல் போய் நீலாட்சி கூறுகிறபடி எழுதத் தொடங் கினான்.

நீலாட்சி அவன் பின்னால் சென்று நின்று அவன் தலைக்கு நேராய் ஒரு துப்பாக்கியையும், சொக்கனுக்கு

நேராய் ஒரு துப்பாக்கியையும் நீட்டியபடியே அச்சுதனை நோக்கி "பத்திரம்! எழுத்தை மாறாட்டமாக எழுதிய பிறகு இது என்கையெழுத்தல்லவென்று ஏமாற்றி விடக் கருதாதே" என்றாள். அச்சுதன் அவள் கூறியபடியே எழுதி முடித்தான். அதன் பிறகு நீலாட்சி சொக்கனுக்குச் சமிக்கைசெய்து இந்தக் கடிதத்தில் சாட்சிகையொப்பம்வை என்றாள். சொக்கன் அவ்வாறே தன்வழக்கமான கையெழுத்தில் சாக்ஷிக் கையொப்பம் வைத்துவிட்டான். நீலாட்சி அச்சுதனை நோக்கி அக்கடிதத்தை மேஜைமேலேயே வைத்துவிட்டு எழுந்திருக்கச்சொல்லி, பிறகு இருவரையும் நோக்கி "சீக்கிரம்! துரிதமாக ஓடி விடுங்கள்" என்றாள்.

அச்சுதன் முன்னேசெல்லச் சொக்க னவன்பின்னால் செல்லும்போது சட்டென்று திரும்பி நீலாட்சியைக்குறிப்பாய் நோக்கினான். முகமூடியிலுள்ள இரண்டு துவாரங்களின் வழியாக அவன் கண்களைக் கண்ட நீலாட்சி ஜெயமடைந்தோம் என்று கூறுவதைப்போல் சமிக்கை செய்தாள். அவர்களிருவரும் வீட்டைவிட்டு வெளிப்பட்டதையறிந்தபின் நீலாட்சி அச்சுதன் எழுதிக்கொடுத்த கடிதத்தையெடுத்து மடித்து எடுத்துக்கொண்டு தன் அறைக்குச்சென்று அதையும் துப்பாக்கிகளையும் தன்பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டு ஞானம்பா ளிருக்கும் அறைக்கு வந்தாள்.

ஞானம்பாள் இன்னும் மூர்ச்சையாகவே யிருக்கிறாள். நீலாட்சி, அச்சுதனும் அவன் ஆளும் அப்பிரதேசத்தை விட்டுச் செல்லப் போதுமான காலம் வரையில் பேசாமலிருந்து அதன்பிறகு ஞானம்பாளின் மூர்ச்சையைத் தெளிவிக்க முயன்றாள். அதன்பிறகு வேலைக்காரர்களையழைத்தாள். உடனேவீட்டில் பெருங்குழப்பம் உண்டாய்

விட்டது. கதவு திறக்கப்பட் டிருந்ததாலும் மற்ற அறி குறிகளாலும் கள்ளர் வந்திருந்தார்கள் என்பது நன்கு விளங்கியது. வந்தவன் அச்சுதனும் அவன் ஆளும் என் பதும் நடந்த மற்ற அதிசய சம்பவங்களும் ஞானம்பா ளுக்காவது வேறு யாருக்காவது தெரியலாகா தென்பது நீலாட்சியின்கருத்து. ஆகையால் ஞானம்பாள் மூர்ச்சை தெளிந்ததும் நீலாட்சி பின்வருமாறு கூறினாள்:—

"நான் அறைக்குச் சென்று படுக்கையில் உட்கார்ந் ததும் என்மனதில் என்னையறியாது ஒருவிதக் கலவரமும் பீதியு முண்டாயின. அவ்வாறு எனக்குத் தோன்றினால் ஏதேனும் விசேஷம் நேர்வதை இரண்டொரு முறை நான் கவனித் திருக்கிறேன். ஆகையால் எனக்கு மனக்கலக்கம் அதிகமாயிற்று. நித்திரையே பிடிக்கவில்லை. ஆகையால் நான் உட்கார்ந்து கொண்டே யிருந்தேன்.

சுமார் அரைமணி நேரத்திற்கு முன் எங்கோ ஒரு கதவுதிறக்கப்பட்ட சத்தம்கேட்டது. என்கலக்கம் அதிக மாயிற்று. நான்ஜாக்கிரதையாய்க் கவனித்துக்கொண்டே யிருந்தேன். பிறகு சற்றுநேரங் கழித்து சமீபத்தில் மெதுவாய்க் கதவு திறக்கப்படும் சத்தமும் எச்சரிக்கை யோடு செல்லும் காலடிச்சத்தமும் என் செவிகளில் வீழ்ந் தன. ஒகோ உனக்குத் திடீலென்று ஏதோ அசௌக்கி யம் நேர்ந்ததென் றெண்ணிக் கொண்டேன். உடனே என்பீதி திகில் யாவும்போய் விட்டன. பழையபடி தைரி யம் உண்டாய் விட்டது. ஆகவேஉனக்கென்ன அசௌக் கியமோ என்ற ஆவலோடு எழுந்து வெளியில் வந்த போது உன் அறையின் கதவு கொஞ்சம் திறந்திருப்ப தைக்கண்டு உள்ளே நுழைந்தேன்.

ஆகா! உடனே பெருந்திகிலும் பிராணபீதியும் உண் டாகி மரம்போல் அப்படியே நின்றுவிட்டேன். ஏனெ

னெனில் அறையில் இரண்டுபேர் நல்ல பலம்பொருந்திய தடியன்கள் முகங்களில் கறுப்பு முகமூடி யணிந்து கொண்டு நிற்கிறார்கள். அவர்களில் ஒருவன் உன் அரு கில் நின்று உன்மேல் கரத்தை நீட்டுகிறான். நகைகளைக் கழற்றவாக்கும். மற்றொருவன் எட்ட நிற்கிறான். நான் கூச்சலிட நினைத்தேன். வாய்திறக்க முடியவில்லை. என் முகத்தில் மிகப் பயங்கரமான விகார முண்டாகி யிருக்க வேண்டும். அக்கள்ளர்கள் மட்டும் என் உண்மை நிலை மையை யுணர்ந்துகொண் டிருந்தால் எவ்வளவோ விப ரீதம் நடந்திருக்கலாம். அவர்கள் பிரியப்படி யாவும் கள வாடிக்கொண்டு போயிருக்கலாம். அதோடு அவர்கள் நன்றாய்ப் பழகிய கள்ளரல்லவென்றே நினைக்கிறேன். ஏனெனில், என் முக விகாரத்தைக் கண்டோ வேறு எத னாலோ, அவர்கள் நான் உள்ளே வந்து நின்றதைக் கண் டதும் ஒரே பாய்ச்சலாய்ப்பாய்ந்து ஓட்டம் பிடித்தார் கள். அவர்கள் சென்றபின்பும் சற்று நேரம் என்னால் வாய்திறக்க முடியவில்லை. அப்படியே திகைப்பூண்டு மிதித்தவள்போல் நின்ற விடத்திலேயே நின்றுகொண் டிருந்தேன். பிறகுதான் எனக்குத் தாராளமாகச் சுவா சம் வந்தது. அதன் பிறகே உன்னைக் கவனிக்கவும், இராஜம்மாளைக் கூப்பிடவும் தொடங்கினேன்'' என்றாள்.

ஞானம்பாள் முதலிய அனைவரும் நீலாட்சி கூறிய கதையைப் பூரணமாக நம்பிக்கொண்டார்கள். மறுநாள் காலையில் அருகிலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குச் சங்கதி தெரிவித்தார்கள். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து யாவும் பார்த்து, "கள்ளரே வந்து நுழைந்திருக்கிறார்கள். அவர்களைப் பிடிப்பவர்களுக்குப் பரிசளிப்பதாய் விளம் பரம் செய்யலாமா?'' என்று கேட்டார். ஞானம்பாள் இதனாலெல்லாம் வீண் பிரஸ்தாபங்களுண்டாகுமென்று

கருதி "அப்படி யொன்றும்செய்ய எனக்குப் பிரியமில்லை" என்றாள். அதன்மேல் இன்ஸ்பெக்டர் "எங்களாலான வரையில் பார்த்து எப்படியாயினும் அக்கள்ளரைக் கண்டு பிடிக்கிறோம்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

நீலாட்சிக்கு ஞானம்பாள் வீட்டில் அச்சம்பவம் நடக்கப்போகும் சங்கதி எப்படி தெரிந்ததென்று இதை வாசிப்போர் வியப்படையலாகும். அவள் அச்சுதன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்துவிட் டிருந்தாள் என்பது தெரிந்த விஷயமே. அவள் தன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காகத் துரிதமாகவும் சுறுசுறுப்பாகவும் வேலை செய்யத் தொடங்கினாள். மிக்க ஆலோசனையோடு தந்திரமாக அச்சுதனுடைய வேலையாளாகிய சொக்கனைத் தனக்கு உளவா யிருக்கும்படி ஏற்பாடு செய்துகொண்டாள். ஆகையால் அச்சுதன் செய்திருந்த ஆலோசனை அவள் காரியத்திற்கும் மிக்க அனுகூலமானதாக விருந்தது. இதற்குமேல் விவரம் நாம் கூறவேண்டியதில்லை.

---

## 26-வது அத்தியாயம்.

### கப்பல் சேதமும்—உலோபியும்.

நேயர்களே! இப்போது நாம் இந்திர புரியில் நடக்கும் மேற்கண்ட விஷயங்களை யெல்லாம் விட்டுவிட்டு வேறிடத்தில், அதிலும் ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் நடுக்கடலில் நடக்கும் சம்பவங்களைப்பற்றிக் கூறவேண்டியது அவசியமாக விருக்கிறது. நண்பர்களுக்கு ஒரு சமயம் இது நமது கதைக்குச் சம்பந்தப்படாத அனாவசியமான விஷயமாகத் தோன்றும். உண்மை யப்படியல்ல. முதலில் அவ்வாறு தோன்றினும்,

ஒரு நீண்ட சங்கிலியின் வளையங்கள் ஒவ்வொன்றும் அச் சங்கிலியைச் சேர்ந்த அவசியமான அங்கங்களாக எப் படிப் பொருந்துகின்றனவோ, அவ்வாறே இப்போது நாம் கூறப்போகும் விஷயங்களும் நமது கதையின் ஓர் முக்கிய பாகமாகப் பொருந்துகிறதென்று சீக்கிரத்தில் விளங்கும்.

பூரண சத்துவகுணமான உள்ளத்தைப்போல் எங்கும் களங்கமற்ற வெட்டவெளியாகிய வானத்தையே போர் வையாக உடைய அகன்ற கடலின் ஓர் பாகத்தில் ஒரு பெரிய கப்பல் சென்றுகொண் டிருக்கிறது. அக்கப்பல் இங்கிதநாட்டு வாத்தகக்கப்பல்களி லொன்று. அதன் பெயர் கடலரசி. அக்கப்பல், இந்திரபுரித் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டு நான்கைந்து மாதங்களாயின.

மாலை சூரியஸ்தமன சமயம் கடல் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அலைகள் மிக்க உயரம் கிளம்பிக் கப் பலின்மேல் மோதிக்கொண் டிருக்கின்றன. காற்றும் பல மாக வீசிக்கொண் டிருக்கிறது. கப்பல் கஷ்டத்தோடு மலைபோன்ற அலையின்மே லெழும்புவதும் ஆழ்ந்த பள் ளத்தில் தலை கீழாக விழுவதுபோல் இறங்குவதுமாக விருக் கிறது. அலைகள் அடிக்கும் வேகத்தால் கப்பலின் மேல் தட்டு முழுமையும் மழை பொழிவதுபோல் நீர்த்திவலை கள் விழுந்துகொண் டிருக்கின்றன. எல்லாக் குறிகளும் பயங்கரமான புயலுண்டாகும் என்று காட்டுகின்றன.

அச்சமயம் ஒரு வாலிபன் அக்கப்பலின் மேல் தட் டின் ஓரத்தில் நின்று கிராதிக்கம்பியைப் பற்றிக்கொண்டு குனிந்து கடலினின்றெழும்பும் அலைகளை நோக்கிக்கொண் டிருக்கிறான். அவனுக்கு வயது சுமார் இருபதிற்குள் ளிருக்கும். நல்ல அழகுடையவன், அவன் கண்கள் பரந்து பிரகாசமுடையனவாக விருந்தன. நல்லதேகக்கட்டுடை

யவன். அவன் அக்கப்பலில் கீழ்த்தர உத்தியோகஸ்தனுக விருக்கிருன்.

அந்த வாலிபன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையோடு கடலை நோக்கிக்கொண் டிருக்கிருன். அவன் மனதில் ஏதோ ஒருவிதத் துயரம் தோன்றி யிருப்பதுபோல் காணப்பட்டது. அது ஒரு சமயம் புயற்காற்றுண்டாயின் கப்பலுக்குச்சேதம் நேரிட்டு நாம் மடியநேருமோ என்ற அச்சத்தாலுண்டானது எனக்கருதலாமா? அப்படிக் கருதவிடமில்லை. ஏனெனில் மாலுமித்தொழிலில் நல்ல அனுபவமுடையவனுனதால் அத்தகைய காற்று, மழை, புயல்முதலிய ஆபத்துகளுக்கு அவன் அஞ்சும் குணமுடையவனல்ல. பயமென்பது இன்னதென்றே அவனுக்குத் தெரியாது. ஒரு சமயம் உத்தியோகத்தில் மேல் அதிகாரியால் கஷ்டப்படுத்தப்படுவது முதலிய அதிருப்தியான விவகாரங்கள் ஏதேனும் நேரிட்டிருக்குமோ வெனில் அப்படியுமில்லை. கப்பித்தான் அவன் மேல்மிக்கவிசுவாசமும் நம்பிக்கையுமுடையவன். அவன் கூடவிருக்கும் உத்தியோகஸ்தர்களோ அவனிடம் மிக்க நட்புகொண் டிருக்கிருர்கள். அவன் கீழுள்ள மாலுமிகள் முதலிய அனைவர்க்கும் அவன் விஷயத்தில் மிக்க அன்புண்டு. அவன் மிக்க நல்லவன் என்பதே அனைவருடைய அபிப்பிராயமும் மற்றபடி எந்த விஷயத்தில்தான் அவனுக்கு மனவருத்தமெனில், "அவனே யறியாமலே அவன் மனதில் ஏதோ ஆபத்து நேரிடும் என்ற குறிதோன்றியது. என்ன ஆபத்து நேரிடும்? என் நேரிடும்? என்பது ஒன்றும் புலப்படவில்லை. அவ்வாறு மனதில் ஒருவிதவாட்டம் தம்மை யறியாமலே தோன்றின் ஏதோ ஆபத்து அவசியம் நேரிடும் என்பது சிலர் அபிப்பிராயம். விசேஷமாய் மாலுமிகள் அப்படிப்பட்ட நம்பிக்கை யுடையவர்கள்

நமது வாலிபன் அவ்வாறு ஆழ்ந்த சிந்தனையிலிருக்கையில் தன் தோளை யாரோ தொடுவதுபோல் தோன்றச் சட்டென்று திரும்பிப்பார்த்தான். ஒரு வயோதிகன் தன் அருகில் வந்து நிற்பதைக்கண்டான். அவ்வயோதிகனுக்கு வயது அறுபதிற்குமேலாயிற்று. அவன் சற்று குட்டையாய்க் கொஞ்சம் வளைந்த தேகமுடையவனாகவிருந்தான். அவன் தேகத்தில் அதிக மாமிசப்பற்றில்லாவிடினும் அவன் கூடியவரையில் பலமுடையவனே. அவன் முகக்குறியாலும் கண்பார்வையாலும் அவன் எதிலும் சந்தேகங்கொள்பவனென்றும், சுயநலங்கருதிச் சமயத்திற்குக் கெஞ்சிப் பேசுபவனென்றும் அறியலாகும். அவன் பாவனை முழுமையும் அவன் மிக்க உலோபகுணமுடையவனென்று தெரிவிக்கத் தக்கதா யிருந்தது.

அவ்வயோதிகன் வாலிபனை நோக்கி, "ஆ! கிருஷ்ணராஜா! தயவுசெய்து ஒரு சங்கதி எனக்கு ஒளிக்காமல் கூறு. ஆம் நீ ஆரம்பமுதல் என்மேல் விசுவாசமுடையவன். தெரிகிறதா? ஒன்று...ஒன்றுமட்டும் கூறு. ஏதேனும்...ஏதேனும் ஆபத்து நேருமென்று கருதுகிறாயோ?" என்று பயத்தோடும் ஆவலோடும் கேட்டான். நேயர்கள் இப்போது இந்தக் கிருஷ்ணராஜன் என்பவன் நமது உண்ணாமுலையின் அத்தை புதல்வன் என்றும் சிறைச்சாலையி லிருக்கும் பராங்குசம்பிள்ளையின் பேரன் என்றும் தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

கிருஷ்ணராஜன்.—ஓ சிங்காரம்பிள்ளை! நீவயது முதிர்ந்த வயோதிகன். கடலிலும் தரையிலும் எவ்வளவோ கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்திருப்பவன். நமக்கும் கடலுக்கு மிடையில் ஒரு மரப்பலகை யிருப்பதால் எந்த நிமிடமும் ஆபத்து அருகிலேயே யிருக்கிறதென்று தெரிகிறதல்லவா. ஆயினும் நமது கப்

பல் உறுதியானதாக இருக்கிற வரையில் ஒருபயமு மில்லை.

கிழவன்:—ஆ! நீங்கள், மாலுமிகள் எப்போதும் அப்படித்தான் - எந்தமாலுமியும் சரி, தங்கள் கப்பல் பழைய வோட்டைத் தொட்டியாக விருந்தாலும் அதற்கு இணையான கப்பல் இல்லவேயில்லை யென்பது வழக்கம்.

கிருஷ்:—நீ எவ்வளவோ கடற் பிரயாணம் செய்திருக்கிறாயே. இதுவரை நேர்ந்த அனுபவத்தால் உனக்குத் தைரிய முண்டா யிருக்க வேண்டாமா?

கிழவன் "அந்த அனுபவத்தால்தான் இப்போது ஏதேனும் ஆபத்து நேரிடுமோ வெனக் கொஞ்சம் மனக்கலக்கம் உண்டாகி யிருக்கிறது. அதனால்தான் உன்னைக் கேட்கிறேன். நீ என்னிடம் எப்போதும் அன்பாய் நடந்து கொள்பவன் என்பதை நான் மறக்கவில்லை........" என்பதற்குள்,

கப்பித்தான் உரத்த சத்தமாகப் பாய்களை யின்னும் குறைக்கும்படி கட்டளை யிட்டான். வாலிபன் அவசரத்தோடு "நீ கீழ்த்தட்டிற்கு உன் அறைக்குச் செல்" என்று கிழவனுக்குக் கூறிவிட்டுத் துரிதமாகக் கப்பித்தான் கட்டளைப்படி தன் பங்குவேலையைச் செய்யச்சென்றான். கிழவன் கடலை யுற்றுநோக்கிவிட்டு மெதுவாய் நடந்து கப்பலின் கீழ்த்தட்டிற்குச் சென்றான்.

சுமார் பத்து பதினைந்து நிமிடங்கள் கழிந்தபின் கிருஷ்ணராஜன் மறுபடி மேல்தட்டிற்குச் சென்று பழையபடி ஓரத்தில் நின்றான். இப்போது முன்னிலும் அதிகமாக அவன்மனதில் ஆபத்து ஏதோ நேரிடும் என்ற உறுதியுண்டாயிற்று. சற்றுநேரம் சிந்தித்துவிட்டுக் கடைசியில் "ஓ கடவுளே! எனது உண்ணமுலைக்காவது என்

பாட்டனருக்காவது ஒரு ஆபத்தும் நேரிடாம லிருக்கப் பிரார்த்திக்கிறேன்" என்று கூறிக்கொண்டான். "ஆ! இன்று அக்டோபர்மீ 5வ இத்தேதியைக் குறிப்பிட்டு வைத்துக் கொள்கிறேன். என்மனதில் இத்தகைய கலவரம் உண்டாகி யிருக்கிறதே. நாம் கடவுள் தயவால் க்ஷேமமாய் ஊர்போய்ச் சேர்ந்தால் இன்றையதினம் இதேவேளையில் அங்கு நம்மைச் சேர்ந்தவர்களுக்கு ஏதேனும் விசேஷம் நேர்ந்ததா பார்ப்போம்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டே, அந்த நாளைத் தன்கையிலிருந்த ஒரு புத்தகத்தில் குறித்துக் கொண்டான்.

சூரியன் பூரணமாக அஸ்தமித்த படியால் எங்கும் இருள் சூழத்தொடங்கியது. காற்று இன்னும் மும்முரமாக வீசத்தொடங்கியது. அலைகள் மேல்தட்டின்மேல் விசேஷஜலத்தைக் கொட்டத் தொடங்கின. ஒவ்வொரு மலைபோன்ற அலை மேல்தட்டின்மேல் புரண்டு கொண்டு போகத் தொடங்கியது. இரவு பயங்கரமான புயற்காற்று அடிக்கும் என்று யாவருக்கும் பீதியுண்டாயிற்று. கப்பித்தான் முன்னிலும் மிக்க சுறுசுறுப்போடும் துரிதமாகவும் எச்சரிக்கையோடு தன் கட்டளைகளை யிடத்தொடங்கினன். மாலுமிகளனைவரும் தங்கள் பிராணன்களைத் திரணமாக மதித்து அதிதுரிதமாகத் தங்கள் தங்கள்வேலைகளைச்செய்ய ஆரம்பித்தார்கள். அந்தப் பிரயத்தனங்களைக் கண்டதால் பிரயாணிகளனைவரும் மிக்க பீதியடைந்தார்கள். உண்மையில் புயல் மும்முரமாகவே அடிக்கத் தொடங்கி விட்டது. மாலுமிகள் மிக்க சுறு சுறுப்பாக வேலை செய்யத்தொடங்கினர்கள். ஆயினும் இடையில் ஒரு கால்மணி நேரம் அவகாசம் இருந்தது. அப்போது கிருஷ்ணராஜு மறுபடி மேல்தட்டில் வந்து நின்றான். அச்சமயம் சிங்காரம்பிள்ளை என்ற கிழவனும் தள்ளாடிக்கொண்டு அவனிடம் வந்தான்.

கிழவன் கிருஷ்ணராஜை நோக்கி "வாலிபனே! அப்பா! என்ன பயங்கரமான காட்சி! ஓ கடவுளே! இக் கப்பல் என்ன இப்படி சாய்கிறதே. தயவு செய்து உன் அபிப்பிராயம் என்ன? ஆபத்து நேரிடுமென்று தோன்று கிறதா?" என்ருன்.

வாலிபன்:—அய்யா! எல்லாம் பயங்கரமான குறிகளா கவே யிருக்கின்றன. நீ பேசாமல் கீழ்த்தட்டில் போயிரு.

கிழவன்:—அய்யோ! எனக்குப் பெரும் பயமாக விருக் கிறது. நீ எனக்கு உண்மையைக் கூறு. அப்படி ஏதேனும் ஆபத்து நேர்வதாயின் தயவு செய்து எனக்கு முன்னடி கூறிவிடு. என்னைக் கைவிடாதே.

வாலிபன்:—"நான் ஒருவரையும் கைவிடமாட்டேன். அப்படி ஆபத்து நேரிடுவதாக விருந்தால் கப்பித் தான் பிரயாணிகளைக் காப்பாற்ற வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்வார்." என்ருன்.

அச்சமயம் வேகமான ஒரு அலை மோதியதால் கப் பல் துள்ளிக்குதித்தது. நின்றிருந்தவர்களில் அனேகர் கீழே வீழ்ந்தார்கள். கிழவனும் அடியோடு விழப்போகும் சமயம் கிருஷ்ணராஜு அவனைப் பிடித்துக்கொண்டான்.

கிழவன்:—"ஓ கடவுளே! இக்கப்பல் கடலில் அமிழ்ந்து போய்விடும். நான் பேசாமல் இருந்த ஊரிலேயே யிருந்துவிடாமல் வந்து விட்டேன்" என்ருன்.

வாலிபன்:—ஏன்? உன்னிட மிருக்கும் பொன்னுக்காக உன்னை அங்குள்ளவர்கள் கொன்றுவிட் டிருக்கவா? நீ தயவு செய்து கீழ்த்தட்டிலுள்ள உன் அறைக்குச் செல்வது நலம்.

கிழவன்:—ஆம் ஆம். இதோ ஒரு நிமிடத்தில் போய் விடுகிறேன். ஆனல் ஒரு விஷயம். கிருஷ்ணராஜு!

நீ மிக்க நல்லவன். கருணையுடையவன். என்மேல் எப்போதும் அன்புடையவன். ஆபத்து நேர்வதாயின்....

கிருஷ்:—அதிருக்கட்டும். ஆபத்தில் நான் உன்னைமறவேன். நீ கிழே செல்.

கிழவன்:—"இரு இரு ஒரு வார்த்தை. அய்யோ இக்கப்பல் என்ன இப்படி சாய்கிறதே!" என்று கூறிக்கொண்டே வாலிபனுடைய இருகரங்களையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு குசு குசு வென்று "இதோ, கொஞ்சம் தயவுசெய்து ஒரு வார்த்தை மட்டும் கேள். ஆபத்து நேர்வதாயின் என்னிடம் கொஞ்சம் பொன் இருக்கிறது. மிக்க கொஞ்சம். ஆயினும் கொஞ்சம் பொன். நீ தயவு செய்து என்னைக்காப்பாற்றிவிடு. அதில்..." என்றதே, வாலிபன் வெறுப்படைந்து "போதும் பேசாதே, எனக்குக் கூலி கொடுப்பதாய்க் கூறுதே." என்றான்.

கிழவன்:—இரு! அவசரம் வேண்டாம், கோபிக்காதே. என் வார்த்தையைக் கொஞ்சம் கேட்டுக்கொள். ஆபத்து நேரிடும்போது என்னை மறவாதே. என் பெட்டி யிருக்கிறது. நீ அதைப் பார்த்திருக்கிறாயல்லவா! என்றான்.

அதற்குள் மறுபடி கப்பித்தானுடைய கட்டளைபிறந்தது. அவரவர்கள் தத்தமது வேலைகளைச் செய்யத் தொடங்கினார்கள். கப்பல் பயங்கரமாய்த் தத்தளிக்கத் தொடங்கியது. கிருஷ்ணராஜு கிழவனை யிழுத்துப் போய் அவன் அறையில் விட்டான். கிழவன் தன் பெட்டியின்மேல் கவிழ்ந்துகொண்டு வாலிபனை நோக்கி "வாலிபனே! நீ என்மேல் மிக்க அன்புடையவன். ஆபத்து நேரிடுமென்றே தெரிகிறது. கிழவனை மறந்து விடாதே.

நீ மறக்கமாட்டாய் - தெரியும். ஆனல் சில நிமிடங்கள் முன்னடி எனக்கு எச்சரிக்கை செய்துவிடு...'' என்று முறையிடத் தொடங்கினன்.

கிருஷ்ணராஜுக்கு அதைக் கேட்டுக்கொண் டிருக்க அவகாசமில்லை. அவன் கிழவனை விட்டுவிட்டு மேலேறினன். சற்று நேரத்திற்குள் புயல் மிக்க மும்முரமாய்விட்டது, கப்பல் அபாயகரமான நிலைமைக்கு வந்து விட்டது. ஒரு பாய்மரம் முறிந்து விழுந்தது; கப்பல் அதிகமாய்ச் சாயத்தொடங்கியது - சுங்கான் போய்விட்டது. அதன் பிறகு கப்பல் கண்ணிழந்தவன்போல் தத்தளித்தது. அலைகள் அதிக உயரவெழும்பத் தொடங்கின. கிருஷ்ணராஜின் உடைகளெல்லாம் நனைந்து விட்டன. எந்த நிமிடத்திலும் கப்பல் ஒரு பாறையின்மேலே மோதப்படக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. எப்படியும் ஆபத்து நேரிடுமென்று தெரிந்துவிட்டது.

ஜனங்களெல்லாம் இதுவரையில் கப்பித்தான்பிரியப்படி கீழ்த்தட்டிலேயே யிருந்தார்கள். இப்போது யாவரும் இனி யங்கிருக்கப் பயந்து மேல்தட்டிற்கு வந்து விட்டார்கள். கப்பித்தான் கப்பலுக்கு ஆபத்து நேர்ந்தால் கடைசியாகப் பிரயாணிகளைக் காப்பாற்ற முயல்வதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத்தொடங்கினன்.

கப்பலிலுள்ள படகுகள், பலகைகள், பிப்பாய்கள், மரத்துண்டுகள், துடுப்புகள், கழிகள், எதெது ஒரு மனிதனையேனும் சுமந்துகொண்டு நீரில் மிதக்கக்கூடுமோ அவைகளனைத்தும் மேல்தட்டில் ஆயத்தமாகக் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. மேல் தட்டில்வந்த ஜனங்களின் கோரக்காட்சி சொல்லத்தரமல்ல. குழந்தைகளுள்ள ஸ்திரீகள் அவற்றைத் தங்கள்மார்போடு அணைத்துக்கொண்டு பிரலாபித்தார்கள். அச்சமையம் பிள்ளையில்லாத மாதர்

கள். ஆ! நமது நிலைமையே மேலான நிலைமையெனக் கருதினர்கள். அவரவர்கள் தங்கள்தங்கள் புருடரையும் மனைவியரையும் சுற்றத்தாரையும் நண்பரையும் கூப்பிட்டுக்கொண்டு அங்குமிங்கு மலைந்தார்கள். எங்கும் பெருங் குழப்பமாகவும் கோஷ்டமாகவும் இருந்தது.

கிருஷ்ணராஜு அச்சமயம் சற்றுநேரம் கிழவனை மறந்துவிட்டுத் தன் வேலையிலிருந்தான் - பிறகு அவனை நினைத்துக்கொண்டு மேல் தட்டெங்கும் தேடிப்பார்த்தான். கிழவன் காணப்படவில்லை. பிறகு ஜனங்களைக் கஷ்டத்தோடு விலக்கிக்கொண்டு கீழ்தட்டிற் கிறங்கி கிழவனுடைய அறைக்குச் சென்று பார்த்தான். அங்கு அவன் கண்முன் கண்டகாட்சி அவனைப் பிரமிக்கச்செய்தது.

கிழவன் தான் சாமான்கள் வைத்துக்கொண்டிருந்த இரண்டு தோற்பைகளைக் காலிசெய்து, பெட்டியி லிருந்த பொற்கட்டிகளில் பெரிய துண்டுகளைப்பொறுக்கி அப்பைகளில் நிரப்பிக்கொண் டிருந்தான். பிராணனே தப்புவது சந்தேகத்திலிருக்கும் சமயத்தில் இந்த லோபி தன் பொன்னைப் பதனப்படுத்திக் கொள்ள முயல்வதைக்கண்ட வாலிபனுக்கு மிக்க வெறுப்பும் வியப்பும் உண்டாயின. இத்தகைய சண்டாளனைக் காப்பாற்ற நாமேன் முயலவேண்டும் என்று அவன் மனதிற்பட்டது. மறுபடி அவன்மேல் இரக்கங்கொண்டு "எழுந்திரு சீக்கிரம்! இனி ஆலசியம் செய்தால் மோசமாகும்" என்ருன்.

கிழவன் இருஇரு, கொஞ்சம் பொறு; இதோவந்துவிட்டேன் என்று சுறுசுறுப்போடு பைகளை நிரப்பினன். வாலிபன் "ஒருநிமிடங்கூடப் பொறுக்க அவகாசமில்லை." என்று கூறிக்கொண்டே கிழவனை இருகரங்களாலும் பிடித்துத் தூக்கப்போனன். கிழவன் "அய்யோ! இரு இரு தொடாதே" என்று அலறி "சற்று! இதோ

பைகள் நிரம்பிவிட்டன. கையில் காசில்லாமல் பிச்சைக் காரனுகவா எங்கேனும் போய்சேர்வது?'' என்றான்.

வாலிபனுக்கு மிக்க ஆத்திரம் வருகிறது. என்ன செய்வான். கிழவன்மேல் கோபமும் வருகிறது. அவனை விட்டுச்செல்லப் பரிதாபமாகவு மிருக்கிறது. என்னசெய் வான் பாபம். கிழவன் இரண்டு பைகளையும் தங்கக்கட்டி களால் நிரப்பியபின் அவற்றின் வாய்களைக் கெட்டியா கக் கட்டிவிட்டுத் தன் மேற்சட்டையைக் கழற்றிவிட்டுப் பைகளைக் கயிற்ருல் இடுப்பில் சேர்த்துக் கட்டத்தொடங் கினுன்.

வாலிபன் பொறுக்க முடியாமல் "ஏ மூடமே! ஒவ் வொருவினடியும் ஆபத்துநேரலாகும். ஒரு சமயம் பிரா ணனைக் காப்பாற்றிக்கொள்ள நீந்தவேண்டியதாக நேரிட் டால், இப்பைகள் உன்னை கடலுக்குள் இழுத்துக்கொண்டு போகத்தான் உதவியாக விருக்கும். எழுந்திரு சீக்கிரம் இன்றேல் உன்னை விட்டு விட்டுப் போய்விடுவேன்'' என்றான்.

கிழவன் "அய்யோ இப்பைகளை யெல்லாரும் பார்க் கவா! சேசே! இதோ ஆய்விட்டது, வந்துவிட்டேன். சட்டைமாட்டிக் கொண்டேன். இதோ ஒருகை ... இன் னும் ஒருகை'' என்று சட்டையை மறுபடி மாட்டிக் கொண்டான்.

அச்சமயம் கப்பல் அதிக பயங்கரமான விதமாகக் கவிழ்ந்து விடுவதுபோல் தள்ளிச் சாய்ந்தது. கிழவன் திடீல் என்று கீழே விழுந்துவிட்டான். கிருஷ்ணராஜு சமாளித்துக் கதவைப் பற்றப்போனுன். ஆயினும் முடி யாமல் பலகைச் சுவர்மேல் மோதிக் கீழேவிழுந்து மூர்ச் சையடைந்தான்.

ஆயினும் இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் வாலிபன் சமாளித்து மெதுவாய் எழுந்தான். கிழவனுல் முன்னமே பத்து நிமிடங்கள்வரை ஆலசியமாகி விட்டது. கிருஷ்ணராஜு ஸ்மரணை வந்ததும் கிழவனை நோக்கினுன். முதலில் அவன் இறந்தானென்றே நினைத்து அருகிற் சென்று குனிந்து பார்த்தான். கிழவன் அப்போதுதான் பெருமூச்சு விட்டு அப்பா என்றுன்.

கிருஷ்ணராஜு அவனை மெதுவாகத் தூக்கிநிறுத்தி, மெதுவாய்வா சீக்கிரம், என்று பிடித்தழைத்துக்கொண்டு மேல் தட்டிற்கு ஏறினுன். அங்கு சென்றதும் ஜனங்கள் குய்யோ முறையோ வென்று கோஷ்டமிடும் சத்தம் செவிகளில் வீழ்ந்தது. கப்பலின் மேல் தட்டில் பார்த்தால் ஒருவரும் காணப்படவில்லை. தன் நண்பர்களின் பெயர்களை யிட்டுக் கூவினுன். ஒரு சத்தமுமில்லை. கப்பலோ அசைவற்று நிற்கிறது. பயங்கரமான அலைகள் வந்து அதன்மேல் மோதிக்கொண் டிருக்கின்றன.

கிருஷ்ணராஜு பேரிடி விழுந்தவன்போ லானுன். ஏனெனில் உடனே அவனுக்கு நடந்த உண்மை யின்னதென விளங்கிவிட்டது. அதாவது கப்பல் ஒரு மணல் மேட்டி லேறிவிட்டது. கப்பலி லிருந்தவர்கள் யாவரும் படகுகளிலும் மரத்துண்டு களிலும் ஏறிக்கொண்டுபோய் விட்டார்கள். கப்பலின் மேல்தட்டில் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த பிப்பாய்கள் மரத்துண்டுகள் முதலிய வற்றில் முக்கால்பங்கு போய்விட்டன. பிராணனுக்குத் தப்பியோடும் அவசரத்தில் கப்பித்தான் ஜனங்களின் குழப்பத்தால் கிருஷ்ணராஜுவும் கிழவனும் இல்லையென் பதைக் கவனிக்கவில்லை. ஆனுல் துணிந்து கடலிற்சென் றவர்கள் பெரும்பாலும் கடலுக்கிரையாய்விட் டிருப்பார்களென்றே, கடலில் உண்டான கோஷ்டத்தால் தெரிந்தது.

186499

ஆகையால் ஒருவிஷயத்திற்கு நாமும் அவர்களோடு போய் மடியாமல் இதுவரையினு மாவது உயிரோடிருக்கிறோமே, இது கடவுட்செயலே யென்று கிருஷ்ணராஜு கருதி கடவுளைத் தோத்தரித்தான். பிறகு கிழவனை ஒருவிடத்தில் உட்காரவைத்து அங்கிருந்த ஒருகயிற்றைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டு, கிருஷ்ணராஜு அங்கிருந்த ஒரு இராந்தலையேற்றி அதைக்கையிற் பிடித்துக்கொண்டு கப்பலின் கீழ்த்தட்டிற்குச் சென்றான். அவன்கருத்தாவது, நாமும் இக்கிழவனும் உடனே மரத்துண்டுகளைப் பற்றிக்கொண்டு இதைவிட்டுக் கடலில் செல்வது நலமா அல்லது விடியுமட்டும் இக்கப்பலிலேயே யிருக்கலாமா வென்பதை யறியவேண்டு மென்பதே.

அவன் கீழ்த்தட்டில் சென்று பார்த்தபோது அங்கு மிக்ககொஞ்சமான ஜலமே ஏறியிருந்தது. கப்பல்முழுமையும் நன்றாய்ப் பார்த்தான். அவசரப்பட்டு கடலில் இறங்கினால் மடிவது நிச்சயம் என்று தோன்றியது. ஏனெனில் கடல், மிக்க தீயினால்கொதித்துப் பொங்கும் எண்ணெய்க் கடாரம்போல் கொந்தளித்தது. நன்றாகச் செப்பனிடப்பட்ட ஒரு கப்பலே அக்கடலில் தங்கியிருப்பது அசாத்தியமெனில் வேறெதுதான் தப்பும். ஆகையால் வாலிபன் விடியுமட்டும் கப்பலிலேயே யிருப்பதென்று தீர்மானித்தான். கப்பல் அழிவது நிச்சயமாயினும் அப்படி நேரிடச் சில நாழிகைகள் வரையிலாவது செல்லும் என்று தோன்றியது. இரவும் அதிகமாகக் கழிந்துவிட்டபடியால் பொழுதுவிடிய அதிக நேரமில்லை யென்று தெரிந்தது.

## 27-வது அத்தியாயம்.

### "அவரவர் வினைவழி அவரவர் செல்வர்"

விடியுமட்டும் கப்பலிலேயே யிருப்பதென்று தீர்மானித்த கிருஷ்ணராஜு அங்கிருந்த மரங்களில் இரண்டு மூன்றெடுத்து ஒரு தெப்பம் கட்ட வெண்ணிக் கிழவனிடம் சென்று தன் அபிப்பிராயத்தைக் கூறினன். கிழவன் கனவில் கேட்பவன் போல் கேட்டு "ஆம். பொன்ன? இருக்கிறது. பத்திரமாக விருக்கிறது" என்றான்.

இதைக்கேட்ட கிருஷ்ணராஜு மிக்க வெறுப்படைந்தான், "சே! இச்சண்டாளன் முகத்தில்கூட விழிக்கலாகாது" என்று கூறிக்கொண்டே அதைவிட்டுச் சென்று தானே ஒவ்வொரு மரமாகத்தூக்கிக்கொண்டு வந்து, மேல் தட்டில் கிராதிகள் பெயர்ந்து போய்ச் சாய்வாக விருக்கும் இடத்தில் வைத்தான். ஏனெனில், அங்கு தெப்பத்தைக் கட்டினல்தான் சமயம் வரும்போது சட்டென்று கடலில் அதை நழுவவிட்டுத் தப்பிச்செல்லலாம்.

ஒவ்வொரு மரமாகக் கொண்டுவந்து முன் இரண்டு இரண்டு பிப்பாய்களை வைத்துக் கயிற்ருல் பலமாகச் சேர்த்துக் கட்டினன். முன்னடியே தெப்பக்கழியைக் கப்பலில் ஒரு பக்கமாய் மரத்தில் கயிற்ருல் கட்டிவிட்டான். வேலை முடிந்ததும் அவனுக்கு மிக்க ஆயாசந் தோன்றியது. மெதுவாக எழுந்து கீழ்த் தட்டிற்குச் சென்று கப்பித்தான் அறையில் பார்த்தபோது அங்கு சில சாராயப்புட்டிகளும், தின் பண்டங்களும் இருக்கக் கண்டு அவற்றில் சுமார் பத்து நாட்களுக்குக் காணும் அவ்வளவு எடுத்து ஒருபெட்டியில் வைத்துத் தூக்கிவந்து தன் தெப்பத்தில் வைத்துக் கட்டிவிட்டான். ஒரு பிப்

பாய் நல்ல ஜலமும் கொண்டுவந்து வைத்துக்கொண்டான். பிறகு சாராயப்புட்டியைத்திறந்து, தான் கொஞ்ச மருந்திக் கிழவனுக்கும் கொஞ்சமளித்தான்.

சாராயம் அருந்தியபின் கிழவன் கொஞ்சம் உற்சாகமடைந்தான். அவன் கிருஷ்ணராஜினருகிற் சென்று "நீ மிக்க நல்லவாலிபன். என்மேல் எப்போதும் அன்புடையவன். நான் உன்னை மறக்கமாட்டேன். என்னை மட்டும் காப்பாற்றி விடு. என்னிடமிருக்கும் பொன்னில் பாதியுனக்களித்து விடுகிறேன்...அப்படி யல்ல. அப்படியல்ல. ஒரு பையில் இருப்பதில் கால்பாகம் உனக்குக்கொடுத்து விடுகிறேன்....ஆம்..." என்பதற்குள்,

கிருஷ்ணராஜ-ட:—"ஓ! அறிவில்லாதவனே! இந்தப் பேச்சை நிறுத்து. உன் பொன்னை நினைப்பதை விடப் பகவானை நினை; பிரார்த்தனை செய். அவர் உன்னைக்காப்பாற்றுவார்" என்றான்.

கிழவன் "இனிச் சொல்லவில்லை. என்னை மட்டும் எப்படியாவது காப்பாற்றி விடு. நான் உன்னை மறக்கமாட்டேன்." என்றான்.

வாலிபன் மறுபடி கீழ்த்தட்டிற்குச் சென்று ஒரு திசையறி கருவியும் தூரதிருஷ்டிக் கண்ணாடியும் எடுத்து வந்தான். பொழுது விடியும்வேளை யாய்விட்டது. முதலில் கிழக்கில் கொஞ்சம் வெளிச்சம் தோன்றியது. வானத்தில் கரியமேகம் நிறைந்திருந்தபடியால் உடனே பூரண வெளிச்சம் உண்டாகவில்லை. வாலிபன் மறுபடி சென்று கப்பலைச்சோதித்தான். கீழ்த்தட்டில் நீர் பாதி உயரத்திற்கு மேல் வந்துவிட்டது. கப்பலும் ஒரு பக்கம் அதிகமாகச் சாய்ந்து விட்டது. எந்தச் சமயமோ கப்பல் கவிழ்ந்து விடும் அல்லது இடைபாதியில் இரண்டாய்ப்

பிளந்து விடும் என்று புலப்பட்டது. அப்படி நேர்ந்தால் அதிலுள்ளவர்கள் அடியோடழிவது நிச்சயம்.

ஆகையால் இனி இதிலிருப்பது அபாயமென்று கிருஷ்ணராஜு அறிந்துகொண்டான். பொழுதும் கொஞ்சம் கொஞ்சமாக விடியத்தொடங்கியது. சூரியகிரணங்கள் சற்றுநேரத்திற்குள் கரியமேகங்களை யூடுருவி வெளிச்சத்தை யுண்டாக்கின. வானமுகடு வரையில் நன்ருய்த் தெரிந்தது. கிருஷ்ணராஜு ஆவலோடு தூரதிருஷ்டிக்கண்ணுடியால் நாற்புறங்களிலும் உற்று நோக்கினன். எங்கும் ஒரு கொடியாவது, படகாவது, ஒரு கழியாவது, மனிதராவது புலப்படவில்லை. சரி, கப்பலிலிருந்து சென்ற அனைவரும் கடலில் மடிந்தார்கள் என்று அவன் மனதிற்குப் புலப்பட்டது. உடனே அவன் மனதிற் பெருந்துயரம் தோன்றியது.

ஆயினும் தன் ஆபத்து நிலைமையை நினைத்ததும் அதை யொரு பக்கம் ஒதுக்கிவிட்டு எச்சரிக்கையோடு எழுந்தான். இனி கப்பலில் ஒரு விநாடியிருப்பதுகூட அபாயம் என்பது நினைவிற்கு வந்ததும், முழங்காலிட்டுப் பணிந்து சற்றுநேரம் கடவுளைப் பிரார்த்தித்து விட்டுக் கிழவனருகிற் சென்று,

"எழுந்திரு! இனி ஒரு விநாடியேனும் இங்கிருக்கலாகாது. வா" என்று அவனை யழைத்துக்கொண்டுபோய் தான் கட்டிவைத்திருக்கும் தெப்பத்திலுட்காரவைத்து, அவன் சறுக்கி விழாதபடி அவன் இடுப்பில் கயிறு போட்டுத் தெப்பக்கழியில் கட்ட முயன்றான். அவன் கிழவனைக்கயிற்றால் கட்டும்போது, அற்பபுத்தியுடையவனும் பணப்பேய் பிடித்தவனும், சர்வசந்தேகியுமான அக்கிழவன், மிக்க சந்தேகமும் திகிலும் நிறைந்த பார்வையாக

அவ்வாலிபனை நோக்கி "அய்யோ! என் பொன்னைத் தொடாதே" என்று அலறினன்.

கிருஷ்ணராஜு இப்படிப் பட்ட அசட்டுச் சண்டாளனைக் காப்பாற்றுவது கூட பாபமே என்று மிக்க வெறுப்படைந்து அதிக கோபத்தாலும் வெறுப்பாலும் அதற்கொருவிடையும் கூறாமல், தெப்பம் அலைகளால் அசைக்கப்படும்போது அக்கிழவன் சறுக்கிவிழுந்து கடலுக்கிரையாகா வண்ணம் அவன் இடுப்பில் கயிறுசுற்றித் தெப்பக் கழியில் இருந்த கயிற்றில் கட்டிவிட்டான்.

அதற்குள் பொழுது நன்றாகப் புலர்ந்துவிட்டது. கிருஷ்ணராஜு, தெப்பம் கப்பலில் கட்டப்பட்டிருந்த கயிற்றை யறுத்துவிட்டான். கப்பல் அதிகமாக ஒரு பக்கம் சாய்ந்திருந்ததால் தெப்பம் சுலபமாகவே சறுக்கிக் கடலில் இறங்கிவிட்டது. அலைகளின் வேகத்தால் அத் தெப்பம் துரிதமாகக் கப்பலைவிட்டுத் தூரத்தில் கொண்டு போகப்பட்டது. இப்போது இவர்கள் இருவரும் அற்பமாகிய அத்தெப்பத்தின் ஆதரவோடு கடலில் செல்கிறார்கள்.

அலைகளின் வேகம் குறையவில்லை யாதலின் தெப்பம் அதில் நெடுநேரம் க்ஷேமமாகச்செல்ல முடியாதென்று அப்போதுதான் கிருஷ்ணராஜுக்குத் தெரிந்தது. என்ன செய்வது? கப்பலிலிருந்தாலும் ஆபத்தே. தெப்பத்தில் கட்டியிருக்கும் கட்டுகள் ஒரு முறை ஒன்றோடொன்று நெருங்கி பிகுவாய் விடுவது போலும், மறுமுறை அதிகமாகத் தளர்ந்து விடுவது போலும் தோன்றின. தெப்பத்தால் ஆபத்தே நேரிடுமென்று கிருஷ்ணராஜுக்குப் புலப்பட்டு விட்டது.

உயரமாகவரும் அலையால் தெப்பம் அதிக உயரத்தில் தூக்கப்படும்போது, வாலிபன் ஆவலோடு கடலின்

நாற்புறங்களிலும் ஏதேனும் கப்பல் செல்கிறதாவென்று பார்த்தான். கண்களுக் கெட்டியவரையில் அகன்ற கடலே யிருக்கிறதன்றி வேறொன்றும் புலப்படவில்லை. அவன் மனம் இடி விழுந்ததுபோ லாய்விட்டது. தன் பாட்டனுரையும் உண்ணுமுலையையும் நினைத்துக்கொண்டான். தான் மாலுமிவேலைக்குச் செல்வதாய்க் கூறிய போது அவர்கள் ஆக்ஷேபித்ததன் உண்மை இப்போது அவன் மனதிற்குப் புலப்பட்டது.

திடீலென்று அவன் அஞ்சியபடி தெப்பத்திற்கு ஆபத்து நேர்ந்துவிட்டது. எவ்வாறெனில், தெப்பத்தின் ஒருபக்கக் கயிறு அறுந்துவிட்டது. உடனே கிழவன் கோவென்றலறும் சத்தம்கேட்டது. கட்டறுந்துவிடவே இரண்டு மரங்கள் விலகிப்போய் அலையின் வேகத்தால் மறுபடி அவை ஒன்றோடொன்று மோதிக்கொண்ட போது, இடையில் தொங்கவிட்டிருந்த கிழவனுடைய ஒரு காலை அவை நசுக்கிவிட்டன.

கிருஷ்ணராஜன் அதைக் கண்டதும், சறுக்கிவிழுவதாலும், அல்லது கிழவனைப்போல் நசுங்குண்பதாலும் தனக்கு நேரிடக்கூடிய ஆபத்தைக் கருதாமல் போய் கிழவனுக்கு உதவி செய்தான். ஒரு பக்கம் கட்டறுந்து போனதால் அப்பக்கத்தில் இருந்த மரங்கள் பிரிந்து அசையத் தொடங்கின. அதனால் சற்று நேரத்திற்குள் தெப்பத்தின் மறுபக்கக்கட்டும் அறுந்துபோயிற்று. கிழவன் கூடியவரையில் மரத்தைப் பற்றிக்கொண்டிருந்தாலும் அது அலைப்புண்டவேகத்தால் கடலிற்றள்ளப் பட்டான். அவன் போட்ட கூச்சலால் வாலிபன் திரும்பிப்பார்த்தான். அச்சமயம் அவன் குந்திப் பற்றிக் கொண்டிருந்த மரம் நீரோட்டத்தால் நெடுந்தூரம் வேக

மாகக் கொண்டுபோகப்பட்டது. கடலில் விழுந்த கிழவன் உடனே முழுகிவிட்டான்.

கிருஷ்ணராஜூ பெரும்பிரமை யடைந்துவிட்டான். அவன் கிழவனுக்கு ஒரு உதவியும் செய்யக்கூடவில்லை. இதனல் அவன் மனதின் மேல் ஒரு பெரிய பாருங்கல் வைத்ததுபோன்றிருந்தது. தன் கண்முன் கடலுக்கிரையாகும் அவ்வயோதிகனைக் காப்பாற்றக்கூடாத நிலைமையில் தான் இருந்தது அவன் மனதை முறிந்துபோகச் செய்தது. அவனுக்குப் பிராணன்மேல் வெறுப்பாகி விட்டது. நமக்கும் முடிவுவேளை வந்துவிட்டதென்று கருதியே மனோவேதனைப்பட்டுக் கொண்டிருந்து, கடைசியில் மடிவதைவிட இப்போதே கடலில் குதித்துவிடலாமாவென்று கருதினன்.

உடனே "ஆ! அது தற்கொலையாகிய பெரும் பாதகமல்லவா!" என்ற நினைவு வந்தது. எத்தகைய ஆபத்து நேரினும் பிராணனைத் தியாகம்செய்ய எங்கேனும் மனம் வருமோ? தற்கொலை புரிந்துகொள்வோனும் தேக மிருப்பதால் நேரிட்ட கஷ்டத்தைச் சகியாது அத்தேகத்தின் மேல் வெறுப்புண்டாகி அதை நீக்கி விடுகிருனேயன்றி, தானகிய ஆன்மாவை ஒருவரும் வெறுப்பதில்லை.

கிருஷ்ணராஜூம் "உயிர் இருக்கிறவரையில் நம்பிக்கையிருக்கிறது. கடவுளையே நம்பியிருப்போம். அவர் கருணைகூர்ந்தால் கடலில் செல்லும் ஏதேனும் ஒரு கப்பல் நம்மைக்கண்டு காப்பாற்றிவிடும்படி செய்வார்" என்று மனதைத் தேற்றிக்கொண்டு கடவுளைப் பிரார்த்தித்தான். அச்சமையம் ஒரு அலை யவன் குந்தியிருந்த மரத்தை மிக்க அதிகமாக மேலுக்குக் கொண்டுபோயிற்று. அச்சமயம் தூரத்தில் ஒரு கப்பற்பாய்போல் அவன் கண்களுக்குப்

புலப்பட்டது. மறுவினாடி அவன் மிக்க பள்ளத்தில் கொண்டுபோகப்பட்டான்.

அவன் அந்தக் கப்பற்பாயைக் கண்டது ஒரு வினாடியேனும் அவன் மனதில் சந்தோஷம் உதித்தது. "கடவுளே! அது கப்பலாகவே யிருக்கவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான். மறுபடி அலை தன்னை மேலே தூக்கியபோது அத்திக்கை யாவலோடு நோக்கினான். அவனுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அவன் கண்களுக்குப் புலப்பட்டது ஒரு கப்பலின் மேற்பாகமே என்று நிச்சயமாகத் தெரிந்தது. அவன் அதைச் சந்திக்க நெடுநேரம் செல்லுமாயினும் அவனுக்கு மிக்க சந்தோஷமுண்டாயிற்று. அச்சமயம் அவன் இருந்த மரம் மணல் மேட்டில்மேல் தட்டிக்கிடக்கும் கடலரசி என்ற கப்பல் இருக்கும் திக்கின் பக்கம் திரும்பியதால் தூரத்தில் அக்கப்பல் அவன் கண்களுக்குப் புலப்பட்டது. இரண்டொரு நிமிடங்கள் அவன் அதைப் பார்த்துக் கொண் டிருக்கையிலேயே அக்கப்பல் புரண்டு ஆழ்ந்த கடலில் விழுந்து முழுகிவிட்டது.

சுமார் அரைமணிநேரம் கழிந்தபின் தூரத்தில் வரும் கப்பல் நன்றாக அவன் கண்களுக்குப் புலப்பட்டது. அது ஒரு சண்டைக் கப்பல்போல் தோன்றியது. தான் அலையால் உயரத் தூக்கப்படும்போது அவன் தன் கரத்தில் ஒரு சீலையைப் பற்றிக்கொண்டு கரத்தை உயரத்தூக்கி விசிறிக்காட்டினான்.

அவ்வாறு இரண்டு மூன்றுமுறை காட்டியபின் கப்பலிலுள்ளோர் அவனைப் பார்த்ததாக சமிக்கை காட்டினார்கள். உடனே அக்கப்பல் தான் செல்லும் பாதையை விட்டு இவன் திக்கை நோக்கிச் சற்று திரும்பி வருவதைக் கண்டான். பின்னும் சற்றுநேரங்கழித்து கப்பலுக்கும்

தனக்கு மிடையில் கடலில் ஒரு கறுப்புப் பில்லைபோல் முதலில் தோன்றியது. வரவர அது ஒரு படகென்று தெரிந்தது. அப்படகு அவனைக் கப்பலுக்குக் கொண்டு போக வந்தது. அது அருகில் வந்ததே அவன் அதில் ஏற்றப்பட்டான். துரிதமாக நன்றியை யறிவிக்க இரண்டொரு வார்த்தைகளைக் கூறியதும் வாலிபன் மூர்ச்சை யடைந்துவிட்டான்.

கிருஷ்ணராஜு மூர்ச்சை தெளிந்து கண் விழிக்கும் போது கப்பலின் ஒரு அறையில் ஒரு மஞ்சத்தில் தான் படுத்திருக்கக் கண்டான். தன் ஈர உடைகள் கழற்றப் பட்டு வேறுடைகள் அணியப்பட்டிருந்தன. தன் அருகி லிருந்தவர்களுக்கு மிக்க நன்றியோடு வந்தன மளித்தான். உடனே அவனுக்குச் சிற்றுண்டி யளிக்கப்பட்டது. அதன் பிறகு அக்கப்பலின் கப்பித்தான் அவனிடம் வந்து விசாரித்தபோது கிருஷ்ணராஜு கடலரசி என்ற கப்பல் அழிந்த சங்கதியை விவரமாகக் கூறினன்.

கிருஷ்ணராஜு நாகரீகமுடையவனுகவும் கல்வியும் ஒழுக்கமும் உடையவனுகவும் இருக்கிறனென்பதை அக் கப்பலிலுள்ளோர் அறிந்துகொண்டார்கள். அந்த யுத்தக் கப்பல் இங்கித நாட்டுக்கப்பலே. அதிலுள்ள உத்தியோ கஸ்தர்களும் கப்பித்தானும் கிருஷ்ணராஜிடம் மிக்க அன் போடு நடந்துகொண்டார்கள். அவர்கள் அவனுக்கு இரண்டு மூன்று ஜதை உடைக ளளித்தார்கள்.

கிருஷ்ணராஜு கப்பலிலேற்றப்பட்ட ஒன்பதாவது நாள் கப்பல் மேற்கிந்தியத் தீவுகளை நெருங்கியது. கட லரசி என்ற கப்பலிலிருந்த ஆட்களில் யாரேனும் உயிர் தப்பியிருந்தால் அவர்கள் ஜனகபுரிக்கே போய் சேர்ந் திருக்கவேண்டு மாதலின், தன்னை அந்நகரில் கரை யிறக்

கும்படிக் கிருஷ்ணராஜு அக் கப்பலின் கப்பித்தானைக் கேட்டுக்கொள்ள, அவன் அவ்வாறே சம்மதித்தான்.

கப்பித்தான் கிருஷ்ணராஜின் வார்த்தைகளை யாவரும் நம்பும் பொருட்டு அவனைக் கடலில் கண்டு காப்பாற்றியதையும், அவன் கப்பற் சேதமடைந்து காப்பாற்றப்பட்டான் என்பதையும்பற்றி ஒரு நற்சாக்ஷிப் பத்திரம் எழுதி அவனிடமளித்தான். கப்பலிலிருந்த உத்தியோகஸ்தரனைவர்களும் பிரிவு போட்டுக்கொண்டு நூறு பவுன்கள் சேகரம்செய்து கிருஷ்ணராஜிடம் அளித்தார்கள். பத்தாவது நாள் மாலை நான்கு மணிக்குமேல் கிருஷ்ணராஜு ஜனகபுரி நகரில் கரை யிறக்கப்பட்டான்.

அந்நகரில் பிநாகபாணிப்பிள்ளை யென்ற ஒருவர் இருக்கிறார். அவர் 'கடலரசி' என்ற கப்பலின் சொந்தக்காரருக்கு அவ்வூரிலுள்ள காரியஸ்தர் (ஏஜெண்ட்). அவர் ஒரு பாங்கிக்காரர். அவருக்கு அங்கு தோட்டங்கள் முதலிய காணி யாட்சிகள் உண்டு. அவருடைய தொழிற்சாலை நகரிலும், வாசஸ்தலம் நகர ஓரத்தில் சுமார் மூன்று மைல் தூரத்திலு மிருக்கின்றன. கிருஷ்ணராஜு கரை யிறங்கியதும் அருகிலுள்ள நகரிற் பிரவேசித்து பிநாகபாணிப்பிள்ளையின் பாங்கிக்குச் சென்றான். அங்கு சென்றபோது அவர் வீட்டிற்குச் சென்றார் என்று தெரிந்தது. கப்பல்சேதத்தைப் பற்றிய சமாசாரத்தை யுடனே கூறவேண்டுமென்ற கருத்தால் அவர் வீடிருக்கும் இடத்தை யறிந்துகொண்டு அங்கு சென்றான்.

கிருஷ்ணராஜு வீட்டிற்குள் நுழைந்ததும் அங்கிருந்த வேலைக்காரனிடம் தன் பெயரை யொரு சீட்டி லெழுதிக்கொடுத் தனுப்பினான். உடனே அந்த வேலைக்காரன் இவனை யழைத்துப்போய் ஒரு அறைக்குள் விட்டான். அந்த அறைக்குள் ஒரு வயது முதிர்ந்த மனிதன்,

அதாவது சுமார் ஐம்பது வயதிற்குமேற்பட்டவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் எதிரிலிருந்த மேஜைமேல் ஒயின், பழவகைகள், பலகாரங்கள், முதலியவை வைக்கப்பட்டிருந்தன. அவர் தன் பெரிய நாற்காலியில் சாய்ந்துகொண்டு சுருட்டு பிடித்துக்கொண்டிருந்தார். அவர்தான் பிணகபாணிப்பிள்ளை. அதே அறையில் ஒரு பக்கம் ஒரு கன்னிகை தாழ்ந்த நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ சீலையில் பூவேலை செய்துகொண்டிருந்தாள்.

பிணகபாணிப் பிள்ளை நமது கிருஷ்ணராஜைக் கண்டதும் அன்போடு "வா உட்கார்! இதோ ஒயின் பழங்கள் பலகாரங்கள் இருக்கின்றன. முன்னே அருந்து" என்றூர். கிருஷ்ணராஜு மரியாதைக்கு அவ்வாறே அருந்தத் தொடங்கினுனெனினும், உடனே தன் சங்கதியைப் பற்றிக் கூறத்தொடங்கி, முதலில் சுருக்கமாய்த் தான் இன்ன கம்பெனியாருடைய இன்ன கப்பலில் ஒரு உத்தியோகஸ்தனென்று கூறிய பிறகு, "அக்கப்பல் சேதமடைந்து முழுகிப்போக நான் கடவுள் தயவால் வேருெரு கப்பலால் காப்பாற்றப்பட்டு இங்குவந்து சேர்ந்தேன்" என்றும் கூறி யுத்தக்கப்பல் காப்டன் தனக்களித்த நற்சாட்சிப் பத்திரத்தை யவரிட மளித்தான்.

பிணகபாணிப்பிள்ளை நற்சாட்சிப்பத்திரத்தை வாசித்துக்கொண்டிருக்கையில் கிருஷ்ணராஜு அங்கிருந்த கன்னிகையை நோக்கினுன். அவள் அணிந்திருந்த உடை அவளுடைய அங்கங்களின் இலட்சணங்களை நன்ருகப் புலப்படுத்தின. அவள் அங்கலட்சணங்கள் அதிசயிக்கத் தக்கவைகளாக விருந்தன. பிணகபாணிப்பிள்ளை வாலிபனளித்த நற்சாட்சிப் பத்திரத்தை வாசித்துப் பார்த்துவிட்டு, அவனை நோக்கி,

"வாலிபனே! நீ செய்தகாரியம் வெகு நல்லதே. அக்கப்பித்தான் கொடுத்த நற்சாட்சிப்பத்திரம் உன் வார்த்தைகளை மெய்ப்பித்து விடுகிறது. "கடலரசி" என்ற கப்பல் அநியாயமாகப் போயிற்று. இதனால் இங்கித நாட்டுக்கப்பலின் பாங்கிக்காரருக்கு மிகுந்த நஷ்டமே. உனக்கு மிக்க ஆபத்தாக முடிந்தது. ஆயினும் நீ பிராணனோடு தப்பித்துக்கொண்டதற்காகக் கடவுளுக்குப் பிரார்த்தனை செலுத்தவேண்டும். ஆயினும் பரவாயில்லை. உன்னைப்பற்றி என்ன செய்யலாம் என்பதைப் பின்னால் பேசலாம். முன்னே தாராளமாக ஒயின் அருந்திப் பழங்களைப் புசி. இதோ நேர்த்தியான சுருட்டுகள். கூச்சம் வைக்கவேண்டாம்" என்றார்.

கிருஷ்ணராஜு அவ்வாறே புசித்தபின் சுருட்டு பிடிப்பதற்காக, அக்கன்னிகையிருக்கிறாளே, ஒரு சமயம் சுருட்டுப் புகை அவளுக்குப் பிடிக்காதோ வென்னமோ வென்று கருதிக் குறிப்பாக அவளை நோக்கினான். அதையறிந்த பிநாகபாணிப்பிள்ளை வாலிபனை நோக்கி,

"ஓகோ! அதைப்பற்றிக் கவனிக்க வேண்டாம். இவள் என் சகோதரன் புதல்வி. சுருட்டுப் பிடிப்பதால் அவளுக்கு அதிருப்தி யுண்டாகாது. என் மனைவியிறந்து சிலவருடங்களாய்விட்டன. இவள்தான் என் வீட்டுக் காரியஸ்தியாகவும் எனக்காதரவாகவும் உள்ளவள். நான் முன்னமே யிவளை யுனக்கறிமுக மாக்கிவைக்க மறந்து விட்டேன். இவள்பெயர் இராஜசுந்தரி. இராஜசுந்தரி! இவர்பெயர் கிருஷ்ணராஜுபிள்ளை" என்றார்.

அத்தேசா சாரப்படி உடனே வாலிபர் இருவரும் ஒருவருக் கொருவர் வந்தன மளித்துக்கொண்டனர். கன்னிகை வாலிபனை நோக்கி "நீர் தாராளமாகச் சுருட்டு பிடிக்கலாம்" என்றாள். கிருஷ்ணராஜு, 'இவள் தேகத்

தின் அங்கங்கள் இவ்வளவு இலக்ஷணமாக விருக்கின்றனவே! இவள்முகம் அவற்றிற்கு ஒத்தவனப்புடையதாக விருக்கிறதா வென்பதை அறியவேண்டுமென ஆவல் கொண்டான். ஆனால் கன்னிகையின் முகம் கொஞ்சம் நிழலிலிருந்தபடியால் அவனுக்கு நன்ருகப் புலப்படவில்லை. முதலில் பார்த்தபோது அம்முகம் இலக்ஷணமாக விராததுபோல் தோன்றியது. கிருஷ்ணராஜு சுருட்டு பிடிக்கத் தொடங்கியதே பிணகபாணிப்பிள்ளை அவனை நோக்கி "இனி நீ கப்பல் சேதத்தைப் பற்றி விவரமாகக் கூறலாம்'' என்ருர்.

அதன் மேல் கிருஷ்ணராஜு கூறத்தொடங்கினன். இதுகாறும் இராஜசுந்தரி அவனை நிமிர்ந்து நோக்கவேயில்லை. வாலிபன் கப்பல் சேதத்திலிருந்து தான் தப்பியதைக்கூறியபோது,உலோபியாகிய அக்கிழவன் விஷயங்களையும் கூறவேண்டியது அவசியமாக விருந்தது. அச்சம்பவங்களில் தனக்குப் புகழ்ச்சி யளிக்கத்தக்க விஷயங்களை யவன் ஒருவாறு ஜாடையாகவே கூறினன்.

பிணகபாணிப்பிள்ளை யிடையிடையில் கேள்விகள் கேட்டு நடந்த விஷயங்கள் ஒவ்வொன்றையும் கிரகித்துக் கொண்டார். யாவும் கூறி முடிந்தபின் அவர் கிருஷ்ணராஜை நோக்கி,

"வாலிபனே! உன் செய்கைகள் யாவும் நீ ஜீவகாருண்யமும், நீதியும், தைரியமும், பொறுமையும் பெருந்தன்மை முதலிய சகலசற்குணங்களையுமுடையவனென்று அறிவிக்கின்றன. உன் நடக்கை யுன் எஜமான்களுக்கு மிக்க கௌரவத்தை யளிக்கத்தக்கது. உன் மற்ற விஷயங்களைப்பற்றிக் கவனிக்க அவசரப்படவேண்டாம். இச்சமயம் சுருக்கமாகக்கூறுகிறேன்; இந்த வீட்டை யுன் சொந்த வீடாகப் பாவித்துக்கொண்டு ஒரு களங்கமு

மின்றி நடந்து கொள்ளவேண்டும்" என்று கூறி விட்டு இராஜசுந்தரியை நோக்கி,

"குழந்தாய்! நீ இனிச்சென்று நமது விருந்தாளிக்கு ஒரு அறை ஆயத்தம் செய்" என்றார்.

அக்கன்னிகை முன்பு நமது கிருஷ்ணராஜன் கப்பற் சேதத்தைப் பற்றிய விஷயங்களைக் கூறியதை கேட்டதே, அவள் முகத்தில் ஒருவித வியப்பும் சந்தோஷமும் உற்சாகமுமான குறியுண்டாயிருந்தது. அவள் கையிலிருந்த தையல் சமான்கள் அவளை யறியாது நழுவிக் கீழே வீழ்ந்தன—அப்போது அக்கன்னிகை தலை நிமிர்ந்து அவ்வாலிபனைச் சற்று நேரம் உற்று நோக்கினுள். அதை வாலிபனும் பார்த்தான். அப்போது அவள் முகம் முழுமையும் அவனுக்குப் புலப்படவில்லை. பிறகு அக்கன்னிகை கடைசியாக எழுந்து சென்றபோது கிருஷ்ணராஜன் அவள் முகத்தைப் பார்க்கக்கருதினன். ஆனல் அக்கன்னிகை மறுபக்கம் திரும்பியபடியே அறையை விட்டுச் சென்ருள்.

கிருஷ்ணராஜன் முன்னமே அவள் தேக அவயவங்களைப்போல் அவள் முகம் இலக்ஷணமுடையதல்லவென்றே கருதியிருந்தான். இப்போது அவள் அவ்வாறு முகத்தைத் திருப்பியபடி சென்றதால், அவள் முகம் சற்றும் அழகுடையதல்லவென்றும் அதை யவள் அறிந்துகொண்டிருக்கிருளென்றும், அதனுல்தான் அவள் தன் முகத்தை மறைத்துக் கொண்டு சென்ருள் என்றும் தனக்குள் நிச்சயித்துக்கொண்டான்.

பினகபாணிப்பிள்ளை தன்னை அவ்வீட்டிலேயே யிருக்கும்படி அன்போடு கூறியதற்காக கிருஷ்ணராஜன் அவருக்கு நன்றியோடு வந்தனமளித்துத் தன்னை யிங்கிதநாட்டிற்குச்செல்லும் ஒரு கப்பலில் ஏற்றி யனுப்பினல்போது

மென்றான். பிள்ளை அதைப்பற்றி யொன்றும் அவசர மில்லை யென்றார். அதன் பிறகு சுமார் ஒன்பது பத்து மணிவரையில் இருவரும் சம்பாஷித்துக்கொண் டிருந் தார்கள். அதன் பிறகு பிறைகபாணிப்பிள்ளை வாலிபனை யழைத்துக்கொண்டு போய் அவனுக்காக ஏற்பாடு செய் யப்பட்டிருக்கும் அறையில் விட்டுத் தாம் தமது சயன அறைக்குச் சென்றார்.

கிருஷ்ணராஜூ அன்றிரவு இராஜசுந்தரியைப் பற் றியே கனவு கண்டான். கனவில் அவள் முகம் வைசூரி வடுக்கள் நிறைந்து மிக்க விகாரப்பட்டிருப்பதாகக் கண்டு "கடவுளே, இத்தகைய அங்கவனப்புடையவளுக்கு முகம் அழகாக விருக்கலாகாதா!" என்று இரக்கமுற்றான்.

---

## 28-வது அத்தியாயம்.

### அதிசய மனிதன் — நட்பாரம்பம்.

மறுநாள் காலை சுமார் எட்டு மணிக்கு கிருஷ்ண ராஜூ நித்திரை தெளிந்தெழுந்து தேகசுத்தி செய்துகொண்டதும் பிறைகபாணிப்பிள்ளை வந்து அவ னைக் காலைப்போஜனத்திற்கு அழைத்துச் சென்றார்.

போஜன அறைக்குச் சென்றபோது வாலிபன் "இராஜசுந்தரியை யிப்போது கண்டு கொஞ்ச நஞ்சம் இருக்கும் சந்தேகத்தையும் நிவர்த்திசெய்துகொள்ளலா மென்று கருதினான். ஆனால் கன்னிகை யங்கில்லை யென் றறிந்ததே கிருஷ்ணராசு மிக்க வியப்புற்றான். ஏனெனில் அவர்கள் தேசாசாரப்படி வீட்டிலுள்ள கன்னிகைகளே விருந்தினருக்கு முக்கியமாக உபசாரங்களைச் செய்ய வேண்டும். வாலிபன் கருத்தை யறிந்த பிறைகபாணிப் பிள்ளை அவனை நோக்கி,

"இராஜசுந்தரி இங்கிருந்து உபசாரம் செய்யவில்லை யென்பதைப்பற்றித் தவறாகக்கருத வேண்டாம். அவள் எப்போதும் அதிகாலையி லெழுந்து காலைப்போஜன மருந்தி சூரியன் மேலேறுமுன் சென்று உலவி வருவது வழக்கம். அதுபோல் சென்றாளே யன்றி உனக்கு மரியாதைக்குறைவாய் நடக்கவேண்டுமென்று கருதுபவ ளல்ல. சுபாவமாகவே அவள் மிக்க நல்ல குணமுடையவள். வெகு சீக்கிரத்தில் நீங்களிருவரும் மிக்க நேசமாய் விடுவீர்களென்பது நிச்சயம்." என்றார்.

வாலிபன் அதற்குத் தக்கவாறு விடைபகர்ந்ததே பிள்ளை "உனக்கு நகரக் காட்சியைக்காண விருப்பமாக விருக்கும். இப்போது என் கூடவே பாங்கிக்கு வந்தால் உன் பிரியமான விடங்களைக் கண்டு வரலாம்" என்றார். கிருஷ்ணராஜு அவ்வாறே செய்வதாகச் சம்மதிக்க இருவரும் உடனே பிணகபாணிப்பிள்ளையின் வண்டியிலேறிச் சென்றார்கள்.

இருவரும் பிணகபாணிப்பிள்ளையின் பாங்கிக்குச் சென்றதும் பிள்ளை வாலிபனை நோக்கி,

"தம்பி! நீ கப்பற் சேதமடைந்து கடவுள் தயவால் எப்படியோ உயிர் தப்பி வந்து சேர்ந்தாய். ஆனால் உன் ஆடை ஆபரணம் முதலியயாவும் இழந்துவிட நேர்ந்தது சுபாவமே. இந்த ஊரில் உனக்கு ஒருவரும் அறிமுக மில்லை. ஆகையால் நான் உனக்கு ஒரு உண்டி (செக்) எழுதிக் கொடுக்கப்போகிறேன். ஆனால் அதையுங்கள் கம்பெனி கணக்கில் சேர்க்கவில்லை. உனக்குத் தாராளமான வருமானம் கிடைக்கும்போது நீ யதைத்திருப்பிக் கொடுக்கலாம்" என்றார்.

கிருஷ்ணராஜு பிணகபாணிப்பிள்ளையின் அன்பிற்காக வந்தன மளித்தபின் மிக்க மரியாதையோடு தனக்கு

இப்போது பணவுதவி வேண்டியதில்லை யென்று கூறி, தன்னைக் காப்பாற்றிய யுத்தக் கப்பலிலிருந்த உத்தியோகஸ்தர்கள் அனைவரும் பிரிவு போட்டுக்கொண்டு தயவாகத் தனக்குச்செய்த உதவியை யியம்பினான்.

பினாகபாணிப்பிள்ளை "சரி இப்போது உனக்குப் பணம் வேண்டாமெனின் இருக்கட்டும். வேண்டியிருக்கும்போது வாங்கிக்கொள்ளச் சற்றும் பின்வாங்கவேண்டாம். இனி நீ போய்க் கடைகள் காட்சிகள் யாவும் பார்த்துவிட்டுப் பொழுதானபின் நேராக வீட்டுக்குச் செல்வதாயின் மிக்க உத்தமமே. அப்படிக்கில்லாவிடின் இங்கு வந்துவிடு. நான்குமணிக்கு வண்டி வரும். இருவரும் போகலாம்" என்றார்.

கிருஷ்ணராஜ அவ்வாறே கடைவீதிகளுக்குச் சென்று சற்றுநேரம் பார்த்துக்கொண் டிருந்து பிறகு நகரின் பிரதான ஸ்தலங்களை யெல்லாம் பார்த்து விட்ட பின், தனக்கு வேண்டிய சில்லரை யுடைகள் முதலியவற்றை வாங்கலாமென்று மறுபடி கடைவீதிக்குச் சென்றான். அவன் ஒரு கடையில் சில சாமான்களை வாங்கிக்கொண்டிருக்கையில் எதிரிலுள்ள கடையில் ஒரு சாளரத்தில் ஒரு கன்னிகையின் முகம் தெரிவதைக் கண்டான். அக்கன்னிகையின் கூந்தல் கரியமேகத்தையும் பழிக்கத்தக்கதாய், பளபளப்போடு செழித்து வளர்ந்திருந்தது. கண்கள் காதளவு நீண்டு அகன்று செவ்வரிபடர்ந்து, சேற்கெண்டையை வெட்கச் செய்யுமாறிருந்தன. அக்கண்களின் பிரகாசம் குளிர்ச்சி பொருந்தியதாக விருந்தது. ஆனால் காணும் வாலிபர் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளும் நஞ்சிட்ட வலைபோலிருந்தது. அவள் நெற்றி மூன்றும் பிறைபோலும், கண்ணாடிபோல் பளபளப்புடையதாகவும் இருந்தது. அவளுடைய புருவங்கள் கன்னங்கள்

யாவும் காண்போர் அதிசயிக்கும்படியாக விருந்தன. சுருக்கமாகக்கூறி விடுகிறோம். நமது கிருஷ்ணராஜு அம் முகத்தைக்கண்டதும் அதன் வனப்பினால் மயங்கிப் பிர மித்து அதை யுற்று நோக்கினான்.

அவன் மரம்போல் சற்று நேரம் அசைவற்று நின்று அம்முகத்தைப் பார்த்துக்கொண்டே யிருந்தான். "ஆ! இத்தகைய முகமுடையவளுக்கு இராஜசுந்தரியின் அவய வங்களைப்போன்ற இலட்சணமுடைய அவயவங்களிருந் தால்—ஆ! இராஜசுந்தரியின் அங்கங்கள் இருக்கும் இலட் சணத்திற்கு இத்தகைய முகம்மட்டும் இருந்தால் அவ ளுக்கிணையான அழகியைக் காண்பது அரிது." என்று சிந்தித்துக்கொண்டான். அவன் மனம் அம்முகத்தால் மயக்கப்பட்டதை யவன் உணரவில்லை.

அக்கன்னிகையின் முகம் இரண்டொரு நிமிடங்களே அச்சாளரத்தில் தெரிந்தது. அவள் மறைந்ததும் கிருஷ்ண ராஜு தான் வாங்கிய சாமான்களுக்குத் துரிதமாகப் பணத்தை யளித்து விட்டு வெளியில் புறப்பட்டான். வீதி யிற் சென்றதும் சற்று தூரத்தில் சில வாலிபமாதர்கள் செல்வதைக் கண்டு துரிதமாக நடக்கத்தொடங்கினான். சற்று தூரம் வரையில் சென்று, போகும் மாதரை யெல் லாம் பார்த்தான். தான் சாளரத்தில் கண்ட முகம் அகப் படவேயில்லை. ஆயினும் அம்முகம் அவன் மனதை விட் டகலவில்லை. அவள் மேல் தனக்குக் காதலுண்டா யிருக்கிறதென்பதை யவன் உணரவில்லை. தன் அம்மான் புத்திரியாகிய உண்ணாமுலை மேல் அவனுக்குறுதியான அன்பிருந்ததெனினும், பின்னால் அவள் நமக்கு மனைவி யாவாள் என்ற உணர்ச்சி அவன் மனதிற்புலப்படவில்லை. அவர்களிருவர்க்கும், ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ள வேண்டிய ஏதோ ஒரு உணர்ச்சி தங்கள் மன

தில் இருக்கிறதென்று மட்டும் தோன்றியதேயன்றி, அது காதல் என்று உணர்ந்து இருவரும் அதை வெளியிட்டுக் கொள்ளவில்லை. ஆகையால் இராஜசுந்தரியைப் பற்றி நம்மனதிலுண்டாகி யிருக்கு முணர்ச்சியால் உண்ணு முலைக்கு நாம் துரோகம் செய்கிறோ மென்பது அவன் மனதிற்றோன்றவில்லை. பின்னால் நேரிடப்போகும் சம்பவங்களுக்காக இவ்விஷயத்தைப்பற்றி நாம் கூறவேண்டியதாயிற்று. இனி கதையைத் தொடர்வாம்.

கிருஷ்ணராஜு பின்னும் சற்றுநேரம் நகரின் முக்கிய பாகங்களை யெல்லாம் சுற்றிப்பார்த்துக்கொண் டிருந்தான். நாம் முன்பு கண்ட வதனத்தை யெங்கேனும் காண்போமா என்ற ஆவல் ஒரு பக்கம் அவன் மனதில் இருந்துகொண்டே யிருந்தது. ஆனால் அம்முகம் எங்கும் காணப்படவில்லை. திடீலென்று தான் அப்போதுதான் வாங்கிய கைக்கெடிகாரத்தை யெடுத்து மணிபார்த்தான். பினுகபாணிப்பிள்ளை வீட்டிற்குத் திரும்புவதாகக்கூறிய காலம்நெருங்குவதை யறிந்துநேராகப்பாங்கிக்குத் திரும்பினன்.

கிருஷ்ணராஜு பாங்கிக்குச் சென்ற அரைமணி நேரங்கழித்துப் பினுகபாணிப்பிள்ளையும் அவனும் வண்டியிலேறிக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள். பினுகபாணிப்பிள்ளை "வாலிபனே! போஜனவேளைக்கு இன்னும் நேரமிருப்பதால் நான் உனக்கு வழியில் சிலவிடங்களைக் காட்டுகிறேன்" என்று கூறித் தமது பூஸ்திதியின் சுற்றளவை யவனுக்குக் காட்டக்கருதி அதைச் சுற்றி அதன் ஓரமாகச்செல்லும் சாலை வழியே வண்டியை விட்டுக்கொண்டு சென்றார். அவ்வாறு சென்றுகொண்டே யிருக்கையில் ஆங்காங்குள்ள விசேஷங்களைப்பற்றிக் கூறினர்.

இவர்கள் செல்லும் மார்க்கத்தில், சற்றுதூரம் சென்ற பின் திரும்பிக் கொஞ்சதூரம் கடலோரமே சென்று, பிறகு உள்நாட்டிற்குத்திரும்பும் வழியில் வண்டி திரும்பியபோது, எதிரில் ஒரு மனிதன் வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதே பிஞகபாணிப்பிள்ளை "வந்தனம் கணபதிப்பிள்ளை!" என்றார். அம்மனிதன் எதையும் இலட்சியம் செய்யாதவன் போல் தலையசைத்து விட்டுச் சென்றான்.

அம்மனிதன் நடுவயதுடையவன். சற்று உயரமாய் மெலிந்த தேகியாயிருந்தான். அவன் தன் தேகத்தைப் பற்றியாவது உடைகளைப் பற்றியாவது ஒரு ஒழுங்கையும் கவனிப்பவனாகப் புலப்படவில்லை. பிஞகபாணிப் பிள்ளை கிருஷ்ணராஜை நோக்கி நான் உனக்குப்பல விசேஷங்களைக் காட்டினே னல்லவா. மனித ஜன்மத்தில் இம்மனிதன் ஒரு அதிசயமான விசேஷம்." என்றார்.

வாலிபன் "அப்படித்தான் தெரிகிறது. இவன் யார்?" என்றான்.

பிஞகபாணிப்பிள்ளை:—"அதுதான் பெரிய அதிசயம். இவன் யாரென்றும், எந்த ஊரென்றும், இவனைப் பற்றிய சங்கதி யின்னதென்றும் ஒருவருக்கும் தெரியாது. இவன் பேரே கணபதி என்று எப்படி தெரிந்ததென்பது எனக்கு மிக்க வியப்பாகவே யிருக்கிறது. ஏனெனில். இவன் ஒருவரோடும் வாய் திறந்து பேசுவதேயில்லை. இவன் கடலோரம் இருக்கும் ஒரு குடிசை வீட்டிலிருக்கிறான். அதைவாடகைக்குப் பேசியபோது சொந்தக்காரனுக்குத் தன் பெயரைக் கூறி யிருப்பான். அப்படித்தான் இருக்க வேண்டும். எப்போதேனும் இவனைக் கண்டால்

மரியாதைக்காக வந்தன மளிப்பதுமட்டுமே யன்றி வேறு விதமாய் இவனோடு நான் சம்பாஷணை செய்ததேயில்லை'' என்றார்.

வாலிபன்:—தாங்கள் மரியாதையோடு வந்தனமளித்தீர்; அவன் மரியாதையாக நடந்துகொள்ளவில்லை.

பினாகபாணிப்பிள்ளை:—''அப்படித் தோன்றினும் அவன் புத்தியில் கொஞ்சம் சபலம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் அவனிடமுள்ள குற்றத்தை நாம் கவனிக்கலாகாது. அவனிடம் மிக்க நல்ல குணங்க ளிருக்கின்றன. அவன் குழந்தைகளிடம் மிக்க அன்புடையவனாக விருக்கிறான். நெடுநேரம் அவர்கள் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அவர்களுக்குக் காசு கொடுக்கிறான். வீட்டு வாடகையைச் சரியாகக் கொடுத்துவிடுகிறான். அவனுக்குக் கிடைக்கும் வருமானம் எங்கிருந்து வருகிறதென்று தெரியாது. வெளியிலிருந்து அவனுக்குப் பணம் வருவதுமில்லை. அவனுக்கொரு வேலைக்காரனிருக்கிறான். அவன் செவிட்டூமை. அவன்றான் அவனுக்கு வேண்டிய வேலைகளைச்செய்வது. இதற்கு மேல் அவனைப்பற்றிய சங்கதி யாருக்கும் ஒன்றும் தெரியாது'' என்றார்.

அதற்குள் இவர்கள் வீட்டருகில் வந்து சேர்ந்தார்கள். இருவரும் வண்டியினின் றிழிந்து உள்ளே செல்லும்போது, போஜன அறையில் உடனே ஆகாரம் பரிமாற யாவும் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன. இருவரும் தங்கள் அறைகளுக்குச்சென்று வேறு உடைகளை யணிந்துகொண்டு போஜன அறைக்குச் சென்றார்கள். அச்சமயம் இராஜசுந்தரி அந்த அறையின் சாளரத்தருகில் நின்று அதன்மேலிருந்த புஷ்பத் தொட்டியைச் சுத்தி செய்து

கொண்டிருந்தாள். அவள் இவர்கள் பக்கமாக முதுகைத் திருப்பிக்கொண்டிருந்ததால் கிருஷ்ணராஜு அவள் முகத்தைக் காணவில்லை.

ஆனால் அவளுடைய அங்கலட்சணங்களைக் கண்டதும் "ஆ! இத்தகைய அங்கலட்சணங்களை யுடையவளுக்கு மட்டும் நாம் கடையில் கண்ட அந்த முகம் இருந்தால் இவளுக்கிணையான அழகுடையவள் எவளுமிராள். என்ன பரிதாபமான சிருஷ்டி" என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டான். பிணாகபாணிப்பிள்ளை,

"ஆ கிருஷ்ணராஜு! நமது இராஜசுந்தரி சில சாமான்கள் வாங்குவதற்காகச் சுமார் இரண்டுமணிநேரம் கடைவீதியில் இருந்தாளே! நீங்கள் இருவரும் சந்திக்காமற்போனது மிக்க வியப்பே" என்றார்.

அச்சமயம் இராஜசுந்தரி இவர்கள் பக்கமாகத் திரும்பினாள். கிருஷ்ணராஜு அவளிடம் சம்பாஷிப்பதற்காக அவளருகிற் சென்று நிமிர்ந்து அவள் முகத்தை நோக்கினான். உடனே அவனுக்குண்டான ஆச்சரியமும் திப்பிரமையும் சொல்லத்தரமல்ல. சற்றுநேரம் இதென்ன மனப்பிரேமையோ கனவோ என்று ஐயுற்று நின்றான். மறுபடி மறுபடி பார்த்தான் ; சந்தேகமேயில்லை. அவன் கடையின் சாளரத்தில் கண்ட அதே முகமே; இராஜசுந்தரியையேதான் அங்குக் கண்டதென்று அறிந்தான்.

மறுவிநாடி அவன் மனதில் உண்டான சந்தோஷத்திற்கோர் அளவில்லை. அவன் மனதில் ஒருவிதப் படபடப்பு உண்டாயிற்று. பிணாகபாணிப்பிள்ளை அதைக் கவனிக்கவில்லை. ஆனால் இராஜசுந்தரி அதைக் கவனித்து நாணத்தோடு திரும்பிக்கொண்டாள். அப்போது போஜனம்செய்யும் சமயம். கிருஷ்ணராஜு பெரும்பாலும் அக்கன்னிகையோடேயே சம்பாஷித்துக்கொண்டிருந்தான்.

போஜனம் முடிந்தபின் அவரவர் தத்தமது படுக்கை யறைக்குச் சென்றார்கள். அன்றிரவு கிருஷ்ணராஜு இராஜசுந்தரியைப்பற்றியே கனவு கண்டான்.

மறுநாள் காலே கிருஷ்ணராஜு அதிகாலையிலெழுந் தான். ஏனெனில், இராஜசுந்தரி அதிகாலையிலெழுந்து காலைப்போஜனத்தை முடித்துக்கொண்டு உலவச் சென்று விடுவாளாதலால் அவளோடுகூடப் போசனம் செய்ய வேண்டுமென்றும், பிறகும் அவள் சகவாசத்தில் இருக்க வேண்டுமென்றும் எண்ணங்கொண்டே அவ்வாறு அதி காலையில் எழுந்தான்.

கிருஷ்ணராஜு கருதியபடியே இராஜசுந்தரியும் அதி காலையிலெழுந்தபடியால் அவன் கோரிக்கைப்படி இவர் கள் இருவரும் தனியாகப் போஜனம் செய்தார்கள். இரவு இவன் அவளோடு பேசிக்கொண் டிருந்தபோதே அவளுடைய நாணம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது. காலையில் அவள் சாதாரணமாகத் தாராளமாகவே இவனிடம் பேசத் தொடங்கினாள்.

இவர்கள் இருவரும் போஜனம் செய்தபின் சம்பா ஷித்துக்கொண் டிருந்தார்கள். பினாகபாணிப்பிள்ளை எழுந்து காலே யுண்டி யருந்தியபின் கிருஷ்ணராஜை நோக்கி "நீ என்னோடுகூட நகரத்திற்கு வருகிறாயா?" என்று கேட்டார். வாலிபன் சற்று நாணத்தோடும் தடு மாற்றத்தோடும் "நான் இங்கு சுற்றுப்பக்கமுள்ள விடங் களைப் பார்க்க விரும்புகிறேன்" என்றான்.

பினாகபாணிப்பிள்ளை:—"உன் மனப் பிரியப்படி செய். இராஜசுந்தரி இங்குள்ள விசேஷங்களை யெல்லாம் காட்டுவாள். அப்படி உனக்குத் தனியே செல்லப் பிரியமாயின் அதைக் குற்றமாக அவள் கருதமாட் டாள்" என்றார்.

நேயர்களே! இச்சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிக் கூற விரும்புகிறோம். ஒரு கன்னிகையைப் புதிதாய் வந்த ஒரு வாலிபனோடு தனியே சம்பாஷிக்கவும் உலவச் செல்லவும் விடுவது மேல்நாட்டாருக்குள் மிக்க நாகரீகமான ஆசாரமாய்க் கருதப்படுகிறது. இந்தத் துர் ஆசாரப்படி நடப்பதுதான் சீர்திருத்தமடைந்த நாகரீகம் என்று கருதும் புத்திமான்கள் நம் நாட்டிலும் சிலர் உளர். இப்போது கிருஷ்ணராஜனும் இராஜசுந்தரியும் அவ்வாறு விடப்பட்டதால் பின்னால் நேரிடப்போகும் விபரீதங்களைக்கவனிக்கும்போது இது எத்தகைய அபாய கரமான அனுசாரம் என்பது நன்கு விளங்கும்.

அச்சமயம் இராஜசுந்தரி மறுபடி புஷ்பச்செடியைக் கவனித்துக்கொண் டிருந்தாள். வண்டி ஆயத்தமாக வந்து விட்டதால் பினுகபாணிப்பிள்ளை நகரத்திற்குச் சென்றார். கிருஷ்ணராஜனுக்கு அக்கன்னிகையின் கூட உலவச் செல்லவேண்டுமென்றே பிரியம். ஆபினும் அவள் அதற்குச் சம்மதிப்பாளோ என்பது ஒரு சந்தேகம். கடைசியில் தைரியமடைந்து துணிந்து "இராஜசுந்தரி! நீ உலவுவதற்கு என்கூட வருவதாயின், அதை மிகக் கௌரவமாகக் கருது வேன்" என்றான். கன்னிகை "ஆகா சந்தோஷமாக வருகிறேன்" என்றாள். இதைக் கேட்டதே கிருஷ்ண ராஜனுக்கு மிகச் சந்தோஷ முண்டாய்விட்டது.

சற்று நேரங் கழித்து இருவரும் உலவச் சென்றார் கள். இவர்கள் பினுகபாணிப்பிள்ளையின் விசால மான தோட்டத்தில் நுழைந்து யாவற்றையும் பார்த்துக் கொண்டே சென்றார்கள். அந்நாட்டுச் சுதேசிகளாகிய நீக்ரோக்களில் அனேகர் அத்தோட்டத்தில் ஆங்காங்கு வீடுகட்டிக்கொண்டு வசிக்கிறார்கள். அவர்களனைவரும் அங்கு வேலை செய்யும் ஆட்கள். அவர்களிடம் இராஜ

சுந்தரி அன்போடு வார்த்தையாடினுள். ஆயினும் தான் மேலான அந்தஸ்திலிருப்பவள் என்ற பெருமைமட்டும் அவளிடம் இருக்கிறதென்றும், கொஞ்சம் மீறினல் அப் பெருமை தீக்ஷணியமான அகங்காரமாக மாறிவிடுமென் றும் வாலிபன் மனதிற்குப் புலப்பட்டது. பழகிய மனிதரிடம் அவள் கூச்சமின்றி மனம்விட்டுத் தாராள மாகப் பேசுகிருளென்றும், புது மனிதரிடமே மிக்க நாணங்கொண்டு ஆரம்பத்தில் பேசாமலிருக்கிருளென் றும் அவன் உணர்ந்தான்.

இருவரும் பல விஷயங்களைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டு செல்லுகையில் வரவர இராஜசுந்தரியின் நாணம் குறையத் தொடங்கியது. அவள்விசேஷமாகத் தலை குனிந்தபடியே யிருந்ததைவிட்டு அடிக்கடி தலை நிமிர்ந்து வாலிபனது வதனத்தை நோக்கிப் பேசவும், தாராள மாகச்சம்பாஷிக்கவும் தொடங்கினுள். இதனுல் வாலிப னுக்கு அவள்மேல் தோன்றிய அன்பு வரவர விர்த்தியடை யத்தொடங்கியது. இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டே தோட்டத்தின் ஓரத்தில் செல்லும் பாதையிற் பிரவேசித்து சற்றுதூரம் சென்றபின் ஒரு திருப்பத்தில் திரும்பினுர்கள்.

---

## 29-வது அத்தியாயம்.

### ஆண்டவன் அதிசயச் செயல்.

இராஜ சுந்தரியும்கிருஷ்ணராஜனும் பாதையின் திருப் பத்தில் பிரவேசித்ததும் அங்கு ஐந்தாறு சிறு பிள்ளைகள் விளையாடிக்கொண் டிருப்பதைக் கண்டார்கள். சற்று எட்ட விருந்த ஒரு பெரிய விருட்சத்தினடியில் ஒரு மனிதன் நின்று அம்மரத்தின்மேல் சாய்ந்தபடி இருந்து அச்சிறுவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கிருன்.

கிருஷ்ணராஜூ உடனே அவன் தான் முன்னாள் கண்ட அதிசய மனிதனாகிய கணபதி என்பவனே என்று தெரிந்துகொண்டான். இவர்களிருவரும் அவ்வழி வருவதை யவன் கவனிக்கவேயில்லை. கிருஷ்ணராஜூ அவன் முகத்தை யுற்று நோக்கினான். அவன் முகத்தில் ஆழ்ந்து வேரூன்றிய துயரமும் ஒருவித வெறுப்பும் இருப்பது போன்ற குறிகள் தோன்றியிருந்தன. கிருஷ்ணராஜூ சூக்குமபுத்தி யுடையவனாதலால் "இவன் உலகில் ஏதோ பெருந்துன்பத்திற் காளாக்கப்பட்டு அந்த வெறுப்பால் இக்கோலமா யிருக்கவேண்டும். ஆனால் இவன் குற்றம் எதுவும் செய்திராதவனாகவே யிருக்கவேண்டும்'' என்று தனக்குள் கருதிக்கொண்டு இராஜ சுந்தரியை நோக்கி,

"அதோ நிற்கும் அந்த அதிசயமான மனிதனைப்பற்றி உன் சிறிய தந்தை நேற்று எனக்குக் கூறினார்'' என்றான்.

இராஜசுந்தரி:—"இவன் மிக்க அதிசயமான மனிதனே. ஆனால் மிக்க நல்லவனே யென்று கருதுகிறேன். இவன் என்னைக் காணும்போதெல்லாம் மிக்க மரியாதையோடு வந்தனமளிக்கிறான். ஆனால் இதுவரையில் இவன் ஒரு வார்த்தையேனும் பேசியதை நான் கண்டதேயில்லை'' என்றாள்.

இவர்கள் இருவரும் கணபதி யிருக்குமிடத்திற் கருகில் சென்றபோது அவன் தட்டென்று தலைநிமிர்ந்து இருவரையும் பார்த்தான். உடனே அவன் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் தோன்றியது. ஆனால் அவன் இருவருக்கும் வணக்கத்தோடு வந்தனமளித்துவிட்டு உடனே அந்த விடத்தைவிட்டுச் சென்றான். இரண்டொரு நிமிடங்களில் அவன் இவர்கள் பார்வைக்கு மறைந்ததும், வாலிபன் கன்னிகையை நோக்கி,

"இவனிடம் ஏதோ பெரிய மர்மமிருக்கிறதாகத் தெரிகிறது. எதனாலோ இவனுக்குப் புத்திச்சபலம் நேரிட்டிருக்கிறது. ஆனால் அதுவும் நான் நிச்சயமாகக் கூறமாட்டேன். நிரபராதியாகிய ஒருவனுக்குத்தான் நம்பிய மனிதர்களாலேயே எதிர்பாராதவண்ணம் ஏதேனும் துன்பங்கள் நேரும்போது அவன் மனதில் உண்டாகும் துயரம் இத்தகையதெனக் கூறமுடியாது. அது மிக்க உலக வெறுப்பையும் உண்டாக்கி விடுகிறது. அத்தகைய மனிதன் சாதாரணமாக ஒரு பைத்தியக்காரன் போலவே காணப்படுகிறான். இன்னும் உலக அநித்தியத்தை யறிந்த உண்மை ஞானியும் பைத்தியக்காரனாகவே காணப்படுகிறான். ஆதலின் இந்த மனிதன் மனோபாவத்தை நன்குணராது இவனைப்பைத் தியக்காரனென்று நாம் கருதி விடுவது தவறு என்பதே என் அபிப்பிராயம்" என்றான். கன்னிகை அவன் கூறிய யாவும் கவனமாகக்கேட்டபின் "தாங்கள் கூறுவது உண்மையே. பலகாரணங்களால் ஒரு மனிதன் வெளித்தோற்றத்திற்குப் பைத்தியக்காரன் போல் காணப்படலாகும். மேலும் இவனிடம் கெட்ட நடக்கைகள் இதுகாறும் ஒன்றேனும் காணப்படவில்லை. அதற்குமாறாக நல்ல நடக்கைகளே சில காணப்படுகின்றன. ஆனால் இவன் ஒருவரிடமும் பேசாமலிருப்பதே மனிதர் இவனுக்குப்புத்திச் சபலம் உண்டென்று கருதுவதற்குக்காரணம். அவன் மனதில் கிளர்ச்சியை யுண்டாக்கத்தக்க விசேஷசம்பவம் ஏதேனும் நேரும்போது இவன் பேசுவானென்றே நான் கருதுகிறேன்" என்றாள்.

இவர்களிருவரும் சம்பாஷித்துக்கொண்டே சற்று தூரம் சென்றபோது பாதைக்குச் சற்று தூரத்தில் ஒரு சிறு வீடும் அதனருகில் இன்னொரு குடிசை வீடும் இருந்

தன. இராஜசுந்தரி அவற்றைக் கிருஷ்ணராஜனுக்குச் சுட்டிக்காட்டி,

"அதோ இருக்கிறதே அந்த வீடுதான் கணபதி வசிப்பது. அருகிலிருக்கும் அக்குடிசை வீட்டில் ஒரு நீக்ரோக் கிழவன் வசிக்கிறான். அவன் ஊமை, காதும் கேளாது. அவன்தான் கணபதிக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் செய்பவன். சமிக்கைகளால் எப்படியோ கணபதி தன் எண்ணங்களை யெல்லாம் அந்த ஊமை யறிந்துகொள்ளும்படி செய்கிறானும்" என்றாள்.

இவர்கள் சம்பாஷித்துக்கொண்டே தோட்டத்திற்குள் நுழைந்து செல்லும்போது எதிரில் சற்று தூரத்தில் ஒரு மனிதன் வருவதைக் கண்டார்கள். அவன் நீக்ரோ ஜாதியான். கருத்து சுருண்டு குட்டையாயிருக்கும் உரோமங்களும், மிகக் கரிய தேகமும், அகன்ற தட்டையான நாசியும், தடித்த உதடுகளும், சிவந்த கண்களும், பார்ப்பதற்குப் பயங்கரமான பார்வையும் உடையவன். அவனுக்கு வயது நாற்பதிற்குள்ளிருக்கும். அவன் உயரமும் தடித்து மிக்க பலம்பொருந்திய அவயவங்களும் உடையவன். அவன் இவர்களைக்கண்டு மெதுவாக நடந்து வந்து கொண் டிருக்கிறான்,

இதுகாறும் இராஜசுந்தரி கிருஷ்ணராஜின் பக்கலில் சற்று எட்டவே வந்துகொண்டிருந்தவள், இந்த மனிதனைக்கண்டதும் கிருஷ்ணராஜின் பக்கலில் நெருங்கத் தொடங்கினாள். அதை யுணர்ந்த வாலிபன் அவனைக் கண்டதால் அக்கன்னிகை யேது காரணத்தாலோ பீதியுறுகிறாளென்று உணர்ந்து அம்மனிதனைச் சற்று கவனமாகவே நோக்கத் தொடங்கினான்.

அவன் கிட்ட வரவர இராஜசுந்தரி அதிக பீதியுடையவள்போல் கிருஷ்ணராஜை நெருங்கியதோடு கடைசியில்

அவன் கரத்தையும் பற்றிக்கொண்டாள். அப்பயங்கரமான மனிதன் மரியாதையோடு நடப்பவன்போலவே இவர்களருகில் வரும்போது சற்று விலகிநடந்து கிட்ட வந்ததும் தாழ்மையோடு இருவர்க்கும் வந்தனமளித்து விட்டு நேரே சென்றான்.

கிருஷ்ணராஜு அவன் முகத்தில் ஒருவித தீக்ஷணியமான குறியைக் கண்டான். மேலும் அவன் கண்களில் வெகு தீக்ஷணியமான பார்வையிருந்ததோடு அது சாந்தமும் களங்கமற்றதுமான பார்வையாக அவனுக்குப் புலப்படவில்லை. மொத்தத்தில் அவன் பார்வையில் ஏதோ தீங்கு இருப்பதாகவே கிருஷ்ணராஜுக்குப் புலப்பட்டது. ஆனால் அதைப்பற்றி அவன் மனதிற்குத் தெளிவாயொன்றும் விளங்கவில்லை.

அம்மனிதன் எட்டச்சென்றதைத் திரும்பிப்பார்த்துணர்ந்த பின்பு இராஜசுந்தரியின் பீதியும், அதற்கு முன் அவன் சமீபத்தில் நெருங்கியபோது உண்டாகியிருந்த நடுக்கமும் கொஞ்சம்கொஞ்சமாகத் தணிந்தன. அதன் பிறகு கிருஷ்ணராஜின் கரத்தைவிட்டு மறுபடி முன்போல் சற்று எட்ட நீங்கியே நடக்கத் தொடங்கினாள்.

கிருஷ்ணராஜு அவளை நோக்கி "இவன் யார்? உங்கள் தோட்டத்தில் வேலை செய்கிறவனா?" என்று வினவினான். கன்னிகை, "இல்லை. இவன் பக்கத்துத் தோட்டத்தில் வேலை செய்பவன். அதன் சொந்தக்காரரிடமிருந்து கடிதம் கொண்டுவந்து என் தந்தையிடம் கொடுக்க வருவான். ஆகையால் இவன் அடிக்கடி நமது வீட்டிற்கு வருபவனே. இவன்பெயர் நீலன்" என்றாள்.

கிருஷ்ணராஜு:—இவன் விஷயத்தில் உனக்கு வெறுப்போ பீதியோ இருப்பதுபோல் தெரிகிறது.

இராஜசுந்தரி:—நான் இவனை அப்போதைக்கப்போது

சந்திப்பதுண்டு. இவன் எப்போதும் மரியாதை யாகவே வந்தனமளிப்பான். நானும் பதில் வந்தன மளிப்பதுண்டு. ஆயினும் இவன் பார்வையில் எனக்கு என்னை யறியாமலே ஒருவிதப் பீதியுண்டா கிறது. அதன் காரணம் எனக்குச் சற்றும் விளங்க வில்லை. இவன் கெட்டவனென்று நான் கேள்விப் பட்டதுமில்லை. மறுபடி நாமேன் இவனுக்குப் பயப்படவேண்டும், இதென்ன கோழைத்தனம் என்று எனக்கு நானே நாணத்தோடு கருதுவது முண்டு. இவனுக்கு நான் எவ்விதக் கெடுதியும் செய்ததில்லை. செய்யக் கருதியதுமில்லை. அப்படி யிருக்க இவன் எனக்குக் கெடுதி செய்வானென்று நான் கருத ஒரு காரணமுமில்லை. இவன் எனக்கு எவ்விதக் கெடுதியேனும் செய்யக்கூடு மென்பதும் எனக்கு விளங்கவில்லை. ஆயினும் இவனைக் காணும் போதெல்லாம் எனக்கு மிக்க பீதியுண்டாவதுமட் டும் நிச்சயமே. இப்போது நீர் நான் சுத்தக்கோழை யென்று இகழ்ச்சியாக நினைப்பீர்'' என்றாள்.

கிருஷ்ணராஜு ஆத்திரத்தோடு "ஒருகாலுமில்லை. உன் புத்தியின் தீக்ஷண்யத்திற்காக நான் மிக்க சந்தோ ஷமேயடைகிறேன். காரணம் சற்றுமின்றி உனதுமனதில் பீதி தோன்றாது. அவன் நம்மைக் கடந்து செல்லும் போது அவன் பார்வையில் நான் அதிருப்தி யடையத் தக்க ஒருவிதக் குறி புலப்பட்டது'' என்றான்.

கன்னிகை யிதைக்கேட்டுத் திடுக்கிட்டு அப்படியா? தாங்கள் அவ்வாறுகருதுகிறீர்? அப்படியாயின் நான் அதை யறிந்துகொள்ள முடியாவிட்டாலும் என் மனதில் உண் டான பயத்திற்குத் தகுதியான ஏதோ காரணம் இருக்கிற தென்றே தாங்களும் சந்தேகப்படுகிறீர்களோ?'' என்றாள்.

கிருஷ்ணராஜு—"நான்படுவது சந்தேகம் மட்டுமல்ல, நிச்சயமாகவே ஏதோ காரணம் இருக்கவேண்டுமென்று கருதுவதோடு நீயவன் விஷயத்தில் எப்போதும் சாக்கிரதையாகவே யிருக்கவேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே மனக்களங்கமற்றவளும் துஷ்ட ஆடவருடைய அக்கிரம நடக்கைகளைப்பற்றிச் சற்று மறியாதவளுமான அக்கன்னிகை மிக்க திகிலும் கலக்கமுமடைந்து,

"அப்படியா? ஏன்? அவனுக்கு நான் ஒரு தீங்கும் செய்யாதிருக்க அவன் ஏன் எனக்குக் கெடுதிசெய்ய வேண்டும். அவன் எனக்குச் செய்யவேண்டிய கெடுதி என்ன விருக்கிறது?'' என்றாள்.

இவள் மொழிகளைக் கேட்ட கிருஷ்ணராஜு இவள் உண்மையாகவே பரிசுத்தமான உள்ள முடையவள் என்று எண்ணிக்கொண்டான். நீலன் பார்வையில் என்ன தீங்கான நோக்க மிருக்கிறதென்று கிருஷ்ணராஜுக்கு முதலில் விளங்கவில்லை யேனும், வரவர அவன் இராஜசுந்தரியின் வனப்பைக்கண்டு மோகவெறி கொண்டிருக்க வேண்டுமென்று அவன் புத்திக்குப் புலப்பட்டது. நீலன் தன் எண்ணத்தை நியாயவழியில் நிறைவேற்றிக் கொள்ள முடியாது. ஆகையால் அவன் துராக்கிருதமான வழியாகத்தான் அதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று கிருஷ்ணராஜுக்குப் புலப்பட்டது. அதனால் தான் அவன் விஷயத்தில் எச்சரிக்கையா யிருக்கும்படி கூறினான். ஆனால் அவன் மனதிற் புலப்பட்ட காரணத்தின் உண்மையை யவளிடம் கூற விரும்பவில்லை. ஏனெனில் அவள் உள்ளத்தில் இன்னும் மாசான எண்ணங்களே பிரவேசிக்கவில்லையென்று அவன் மனதிற்குப் புலப்பட்ட

படியால், அதைக் கூறின் அவளுக்கு மிக்க அருவருப்பு தோன்றும் என்று அவனுக்குப் புலப்பட்டது.

சில நாட்கள் கழிந்தன. கிருஷ்ணராஜு இராஜசுந்தரியிடம் அதிக நட்புடையவனுகிவிட்டான். அவள் வரவர இவனிடம் கூச்சம்விட்டுத் தாராளமாகப் பேசப் பழகிவிட்டாள். அவள் தன்னிடம் அன்புகாட்டி நடந்து கொள்கிறுளென்று அவன் மனதிற்குப் புலப்பட்டது. நாளுக்குநாள் அவளுடைய ஒழுக்கத்திலும் குணங்களிலும் அறிவிலும் கிருஷ்ணராஜுக்குப் பிரீதி யதிகரித்தது. அவளுக்கும் தன்மேல் பிரீதியுண்டாகி யிருக்கிறதென்று அவனுக்குப் புலப்பட்டது. இராஜசுந்தரிக்கும் அவ்வாறே இவனைப்பற்றிப் புலப்பட்டது. ஆயினும் ஒருவருக்கொருவர் தத்தமது மனோபாவத்தை வெளியிட்டுக் கொள்ளவில்லை. பினகபாணிப்பிள்ளைக்கு கிருஷ்ணராஜு தன் பிரியப்படி சந்தோஷமாகக் காலத்தைக் கழிப்பது மிக்க திருப்தியாகவே யிருந்தது.

இவ்வாறிருக்கையில் ஒருநாட்காலை இராஜசுந்தரி சில சாமான்கள் வாங்கும் நிமித்தம் கடை வீதிக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது அவள் தன்னையும் வரும்படி யழைக்காததால் கிருஷ்ணராஜு தனக்கிருந்த பிரியத்தை வெளியிடவில்லை. அவள் சென்றபின் கிருஷ்ணராஜு தான் தனியாக உலவிவரலாம் என்று சென்றான். அவன் உலவிக்கொண்டே கடலோரம்சென்று கடலின் அருகில் உட்கார்ந்து அலைகளைப் பார்த்துக்கொண்டே சிந்தனையி லிருந்தான். அவன் நினைவு முழுமையும் இராஜசுந்தரி யின்மே லிருந்தது. அவள் வனப்பு அவ்வாலிபனுடைய மனதைக் கவர்ந்துகொண்டது. அவன் இராஜசுந்தரியையும் தன் அம்மான் புத்திரியாகிய உண்ணுமுலையையும் தனக்குள் சிந்தித்துப்பார்த்தான். எல்லா விஷயங்களி

லும் உண்ணுமுலையைவிட இராஜசுந்தரி மிக்க மேலான அழகுடையவள், சாதுரியம், நாணயம் முதலிய யாவும் அதிகமாக வுடையவள் என்று அவன் மனதிற்பட்டது. ஆனால் அவன் "எப்படியிருந்தாலும் உண்ணுமுலையைக் காதலிப்பதுபோல் இந்த இராஜசுந்தரியை நான் காதலிக்கமாட்டேன். உண்ணுமுலை என் இரத்தக்கலப்பான சுற்றத்தாள். இராஜசுந்தரி எனக்கு ஒரு பாத்தியமுமில்லாதவள்'' என்று தன்மனதில் தானே கூறிக்கொண்டான்.

இவன் இவ்வாறு சிந்தித்துக்கொண்டே கடலை நோக்கிக்கொண் டிருக்கையில், கடலோரத்தில் ஏதோ ஒன்று அடித்துக்கொண்டு வருவதுபோல் தோன்றியது. முதலில் பார்த்தபோது அது ஒரு கட்டையைப்போல் தோன்றியது. அதன்மேல் அவன் தன் சிந்தனையை விட்டுவிட்டு அதை யுற்று நோக்கினன். அது கரையோரம் அடித்துக்கொண்டுவரப்பட்டபோது. அது கட்டையல்ல, ஒரு சவம்என்று தெரிந்தது. அதன்மேல் அவன் எழுந்து அலைகளிருனருகிற்சென்று அச்சவத்தைக் கரையி லிழுத்தான்.

சவத்தைக் கரையிலிழுத்ததும் அதை யுற்று நோக்கினன். அதன் முகம் மிக்க விகாரமடைந்து காணப்பிடிக்காதபடி ஊதிப்போய் இருந்ததோடு மீன்கள் முகத்திலிருந்த மாமிசத்தைப் பிய்த்துத் தின்றுவிட் டிருந்தன. ஆகையால் முகத்தைப்பார்த்து அது யாருடைய சவமென்று அறியக்கூடவில்லை. அப்படியாயினும் கிருஷ்ணராஜு அதன்மேலிருந்த உடைகளாலும் அதன் இடுப்பில் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்த இரண்டு பைகளினுலும் அது உலோபியாகிய சிங்காரம்பிள்ளையின் சவம் என்று தெரிந்து கொண்டான்.

கிருஷ்ணராஜு அச் சவத்தைக்கண்டு அந்தலோபிக்கு

இத்தகைய மரணம் நேர்ந்ததே என்ற நினைப்பால் மிக்க வெறுப்படைந்து திரும்பியபோது அருகில் கணபதிப் பிள்ளை நின்று நடந்த சம்பவத்தை யுற்றுநோக்கிக்கொண் டிருக்கக்கண்டான். வாலிபன் அவனை நோக்கியதே கண பதிப்பிள்ளை "ஆ! கடல் தன்னிடம் அமிழ்ந்திறந்தவர் களை வெளியில் எறிந்து விடுகிறது. இப்படியே ஒரு மனித னுடைய மனதில் புதையுண்டிருக்கும் மர்மமான இரகசி யங்களும் ஒரு நாளைக்கு வெளியில் எறியப்படும்" என்றான்.

அதிசயமான அம்மனிதன் தன்னிடம் அவ்வள வேனும் வலியப்பேசியதைக்கண்ட கிருஷ்ணராஜ மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்து அவன் மனதிலுள்ள வற்றை வெளியி லிழுக்கவேண்டுமென்று கருதி, "ஆனால் மனிதனிடத்தில் மறைந்துள்ள மர்மங்களில் குற்றம் ஒன்றுமின்றி வெறும் துயரம் மட்டுமே யிருந்தால், இக் கடல் எவ்வளவு கஷ்டமின்றி இறந்தவனை வெளியில் எறி கிறதோ, அவ்வாறு மனம் கஷ்டமின்றியே இரகசியங் களை வெளியிட்டுவிடும்" என்றான்.

கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜைக் கவனமாக உற்று நோக்கி "ஆம். நீ கூறுவது உண்மையே. வாலிபனே! நீ மிக்க சாமார்த்தியத்தோடு உன் வார்த்தைகளைச் சேர்த் துக்கூறினை. என் மனதிலுள்ள இரகசியத்தைப் பிடுங்க நீ இவ்வாறு யோசனைசெய்தாய். என் இருதயத்திலுள்ள இரகசியங்கள் வெளிவந்தால் அவை வெறும் துன்பமும் துயரமுமாகவே இருக்குமோ, அல்லது அவற்றில் குற் றம் ஏதேனுமிருக்குமோவென்று ஐயுறுகிறாய். நீ அவ் வாறு அச்சங்கொள்ளவேண்டாம். என் உள்ளத்தில் குற் றம் ஏதேனு மிருந்தால், இப்போது உன் முகத்தில் தோன்றும் நாணத்தை விட அதிகமான நாணம் என் முகத்தில் தோன்றும். ஆனால் என் முகத்தில் அப்

படியொன்றும் தோன்றவில்லை. ஆயினும் நான் உன்மேற் கோபங்கொள்ளவில்லை.. எப்படியாயினும் அது போகட்டும். இப்போது நமக்கு அறிமுகமில்லாத இம்மனிதனுடைய சவம் கரையில் அடித்துக்கொண்டு வரப்பட்டிருக்கிறது'' என்றதே,

கிருஷ்ணராஜு "இவன் எனக்கு அறிமுகமில்லாத ஆளல்ல. ஒரு வாரத்திற்கு முன் நான் கப்பற்சேதத்தில் சிக்கிக்கொண்டபோது இவனும் என்னோடுகூட சிக்கிக்கொண்டவன். இவன் பெயர் சிங்காரம்பிள்ளை'' என்றான்.

கணபதிப்பிள்ளை "ஓ அப்படியா? அப்படியாயின் இவனை நீ யறிவாய். இப்போது இவன் முகம் அடைந்திருக்கும் விகாரமான நிலைமையில் இவனுடைய சொந்தத் தாய்கூட இவனை யறிந்துகொள்ளமாட்டாள். நீ இவனுடைய உடையால் இவனை யறிந்துகொண்டாய் போலும்'' என்றான்.

கிருஷ்ணராஜு:—"உடைகளால் மட்டுமேயன்றி, இதோ இவன் இடுப்பில் கட்டப்பட்டிருக்கும் இரண்டு பைகளிருக்கின்றனவே, இவற்றால் இவன்றான் அம்மனிதனென்று சற்றும் ஐயமின்றி அறிந்துகொண்டேன். இந்த இரண்டுபைகளிலும் நிறைய பொற்கட்டிகளிருக்கின்றன'' என்றான்.

கிருஷ்ணராஜு பொற்கட்டிகளைப் பற்றிய இரகசியத்தைக் கூறக்கேட்ட கணபதிப்பிள்ளை மிக்க வியப்படைந்து மிக்க அன்பான பார்வையோடு அவனை நோக்கி "ஆ! அப்படியா! தயவுசெய்து கப்பற்சேதத்தைப் பற்றிய விவரத்தைக் கொஞ்சம் கூறவேண்டுகிறேன்'' என்றான்.

தான் மிக்க அதிசயமானவனென்று கருதிய அம்மனிதன் தன்னிடம் அவ்வளவு தாராளமாகவும் அன்

போடும் பேசுவதைக்கண்ட வாலிபன் மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்து கப்பற் சேதத்தைப்பற்றிய எல்லா விஷயங்களையும் அவனிடம் கூறினன். ஆனால் தனக்குப் புகழ்ச்சியை யளிக்கத்தக்க விஷயங்களை மட்டும் சற்று மர்மமாகவே கூறினன். ஆனல் கணபதிப்பிள்ளையோ பிணகபாணிப்பிள்ளை கேட்டதை விட மிக்க சாதுரியமான கேள்விகளால் எல்லா விவரங்களையும் வெளியில் வரும் படிச் செய்துவிட்டான்.

யாவும் கேட்டுக்கொண்டபின் கணபதிப்பிள்ளை, வாலி பனை நோக்கி "அக்கிழவனுக்கு யாரேனும் சுற்றத்தார் இருக்கிறார்களோ? என்று கேட்டான்.

கிருஷ்ணராஜன்:—அக்கிழவனுக்கு எவ்விதச் சுற்றத்தாரா வது, சந்ததியாவது, நண்பராவது ஒருவருமே யில்லை. அவ்வாறு அவன் பன்முறை யென்னிடம் கூறியிருக்கிறான். அதோடு "நீ யொருவன்றான். என் மேல் அன்புடையவனாக இருக்கக்கண்டேன். என க்கு வேறொருவருமில்லை" என்று கூறி யிருக்கிறான். அதுபோலவே அவன் கப்பலிலிருந்த வேறொருவ ரிடமும் பேசுவதேயில்லை. என் ஒருவனையே தனக் குப் பாதுகாப்பாக நம்பி யிருந்தான். அதனாற்றான் நான் அவனுக்கு அத்தகைய அன்புகாட்ட நேர்ந் தது. அதனாற்றான்அவனது உலோபகுணத்திற்காக அவன் மேலுண்டான வெறுப்பைக்கூட நான் கவ னிக்காமல் பொறுத்துக்கொள்ள நேர்ந்தது" என்றான்.

கணபதி "சரி அப்படியாயின் அந்தப்பொன் முழு மையும் உனக்கே யுரித்தானது. எல்லா விஷயங்களிலும் உனக்கே யதில் பாத்தியமிருக்கிறது. முதலாவது நீயே கடைசியாக அவனோடிருந்தவன். உன் ஒருவன்மேல்தான்

அவன் அன்பு வைத்திருந்தான். நீ பிராணபத்திற்குட் பட்டு அவனுக்கு எவ்வளவோ உதவிசெய்து அவனைக் காப்பாற்ற முயன்றாய். அவன் உயிரோடிருந்தால் உனக்கு இதில் பாகம் அளிப்பதாகக் கூறியிருக்கிறான். ஆகையால் நீ யவனுக்கு அப்போது உதவி செய்ததன்னி யில் இப்போது அவன் சவத்தை நீயே கடலிலிருந்து வெளியிலிழுத்திருக்கிறாய். ஆகையால் நீ தாராளமாக அப்பொன்னை யெடுத்துக்கொள்ளலாம்'' என்றான்.

கிருஷ்ணராஜ: தாங்கள் கூறுவதனைத்தும் அவன் பொருளை நான் எடுத்துக்கொள்வதற்குத் தகுந்த காரண மாக எனக்குப் புலப்படவில்லை. நியாயப்படி நான் அதற்குச் சொந்தக்காரனெனத் தெரிந்தால் மட்டுமே நான் அதைப் பெற்றுக்கொள்வேன். நான் அவ்வாறு சொந்தக்காரனவதற்கு ஒருவழியுமில்லை'' என்றான்.

இவன் மொழிகளைக் கேட்ட கணபதி மிக்க வியப் படைந்து வாலிபனை யுற்றுநோக்கி ''என்ன! எப்படியோ! எந்த வழியாகவோ வலிய செல்வம் கைக்கு எட்டுவதாக விருக்கும்போது அதை வேண்டாமென்று கூறும் ஒரு மனிதன்கூட இவ்வுலகத்தில் இருக்கிறானா? இதென்ன வியப்பு! சரி இருக்கட்டும் வாலிபனே. நான் ஒரு சாட் சியா யிருப்பதால் பின்னல் இது அகௌரவத்தை யுண் டாக்குமென்று கருதுகிறாயாக்கும். அப்படியாயின் எனக் கும் கொஞ்சம் பாகம் கொடுத்துவிட்டு நீ யெடுத்துக் கொள். அப்போது பயமின்றிச் செய்யலாம்'' என்றான்.

இவன் கூறியதைக்கேட்ட வாலிபன் சற்று கோப மடைந்து ''நான் எந்த ஏற்பாட்டிற்கும் ஒப்பி அதை யெடுக்கமாட்டேன். அதன்றி ஒருவரும் அதைத் தொட விடவு மாட்டேன். தக்க அதிகாரிகள் வரவேண்டும். தேசச் சட்டம் எப்படியோ அப்படி நடந்துபோகட்டும்.

ஒரு சமயம் இப்படித் திக்கற்றவன் சொத்து இராஜாங்க பொக்கிஷத்தில் சேர்க்கப்படுவதாக சட்டமிருக்கும். அந் தந்தநாட்டுச் சட்டம் எப்படியோ அப்படி..." என்றதே,

கணபதி "போதும் போதும் வாலிபனே! உன் பிரியம்போல் செய். நானே அனாதை. என்னைச் சேர்ந்தவர்கள் ஒருவருமில்லை. எனக்கேன் அப்பொன்! அதில் ஒரு அணுவும் எனக்கு வேண்டாம். உலகபோகங்களை யனுபவிப்பவனுக்கு அது வேண்டும். நானே எல்லா போகங்களையும் அடியோடு வெறுத்தவன். எனக்கு அப்பொன் இதோ விருக்கும் கடல் மணலினும் தாழ்ந்ததே. ஆனால் நீயோ இன்னும் வாலிபன். இனிமேல் உலகில் மனைவியின் சுகம், புத்திரர் சுகம், மற்ற உலகபோகங்கள் யாவும் அனுபவிக்கவேண்டியவன். நீ வலிய உனக்குக் கிடைக்கும் இப்பொன்னை வேண்டாமென்று கூறுவதுதான் எனக்குச் சொல்லொணு வியப்பை யுண்டாக்குகிறது. அடடா! பொன்னுக்காக மனிதன் என்ன குற்றந்தான் செய்யவில்லை. நீதியே பொன்னுக்கு மாறிவிடுகிறதே, அப்படியிருக்க நீ ஒரு குற்றமும் செய்யாமலே இதைப் பெற்றுக் கொள்ள வெறுக்கிறுயே'' என்றுன்.

வாலிபன் "ஆம் அதைத் தொடவும் எனக்கு வெறுப்பே'' என்றுன்.

கணபதி:-"வாலிபனே! நீ செல்வத்தை வேண்டாமென்று நிராகரித்து விட்டாலும் உன் உத்தம குணத்திற்கும், பெருந்தன்மைக்கும், நன்னெறிக்கும் கடவுளே சீக்கிரத்தில் உனக்குத் தக்க பரிசளிப்பார். நீ இங்கேயே யிரு. அப்பொன்னுக்கு அதைத் தொடவும் வெறுக்கும் நீயே தகுதியான காவல்'' என்று கூறிவிட்டு வேகமாய்த் திரும்பிச் சென்றுன்.

## 30-வது அத்தியாயம்.

### உத்தம குணத்தின் பயனும் — காதலும்.

கணபதிப்பிள்ளை கூறிய வார்த்தைகளாலும் அவன் தட்டென்று சென்றமாதிரியாலும் அவன் சவத்தை யெடுத்துச் செல்ல ஆட்களழைத்துவரவே சென்றானென்று கிருஷ்ணராஜுக்குப் புலப்பட்டது. அதன் மேல் அவன் ஏற்பாட்டின்படி அங்கேயேயிருக்கத் தீர்மானித்தான்.

சுமார் ஒரு மணிநேரங் கழிந்தபிறகு யாரோ நான்கு பேர் ஒரு டோலியை யெடுத்துக்கொண்டுவரக் கண்டான். அவர்கள் அருகில் வந்ததும் அவர்களனைவரும் பினாகபாணிப்பிள்ளையின் தோட்டத்தில் வேலை செய்வோர்கள் என்று அறிந்தான். அவர்கள் வந்ததும் பிணத்தைத் தூக்கிக்கொண்டு சென்றார்கள். கிருஷ்ணராஜு கூடவே சென்றான். ஆட்கள் சவத்தைத் தூக்கிக்கொண்டுபோய் பினாகபாணிப்பிள்ளையின் வீட்டிற்குச் சற்று தூரத்திலிருந்த ஒரு சிறு வீட்டில் வைத்துக் கதவைமூடிப் பூட்டிக்கொண்டு, வாலிபனிடம் சாவியையளித்து "விநாயகம் பிள்ளை கட்டளையிட்டபடி செய்துவிட்டோம்" என்று கூறிச் சென்றார்கள்.

கிருஷ்ணராஜு சாவியை யெடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். கடைவீதிக்குச் சென்றிருந்த இராஜசுந்தரி ஒருமணி நேரத்திற்கு முன்பே திரும்பிவந்துவிட்டதாகத் தெரிந்தது. மேலும் சவத்தைப்பற்றிய சங்கதிகூட அவளுக்குத் தெரிந்திருப்பதாக விளங்கியது. கணபதிப்பிள்ளை அங்குவந்து அதைப்பற்றிக் கூறியே ஆட்களை யழைத்துக்கொண்டு சென்றிருக்கிறான் என்று இராஜசுந்தரி கூறினாள். ஆனால் அச்சவத்தின் இடுப்பில் இரண்டு

பைகள் நிறைந்த பொன் கட்டப்பட்டிருந்த தென்பதை யும் கிருஷ்ணராஜு அதையெடுத்துக்கொள்ள மறுத்து விட்டதையும் கணபதி கூறியதாக அவள் இயம்பவில்லை. ஆயினும் அவள் தன்னை உற்றுப்பார்த்த பார்வையால் கணபதி அதைப்பற்றிகூடப் பேசி யிருக்கவேண்டு மென்று கிருஷ்ணராஜுக்குப் புலப்பட்டது.

சற்றுநேரங் கழித்துப் பிநாகபாணிப்பிள்ளை தன் தொழிற் சாலையிலிருந்து வந்தார். அவர் வந்ததும் இராஜசுந்தரியை நோக்கி "ஆ! நீ எனக்கு ஒரு சங்கதியும் கூறவேண்டாம். எனக்கு எல்லாச் சங்கதிகளும் தெரிந்து விட் டிருக்கின்றன. அந்த விநாயகம்பிள்ளை இதுகாறும் மௌனமாகப் பேசாமலிருந்ததற்கு ஈடுசெய்ய இப்போது மிக்க தாராளமாகப் பேசத் தொடங்கிவிட் டிருக்கிறான். அவன் நமது கிருஷ்ணராஜைப்பற்றி எவ்வளவு புகழ்ந்து பேசினான் தெரியுமா! நமது வாலிப நண்பன் என்ன கௌரவமான வேலைசெய்து இருக்கிறான் தெரியுமா? ஆ! இவனுடைய பெருந்தன்மையான குணங்களை யென் னென்று கூறுவேன்" என்றார்.

இராஜசுந்தரி "எனக்கு எல்லாச்சங்கதிகளும் தெரி யும். கணபதிப்பிள்ளை யெல்லாசங்கதிகளையுங் கூறினார்" என்றாள். பிநாகபாணிப்பிள்ளை "ஆம் ஆம். மறந்து விட் டேன். கணபதிப்பிள்ளை தான் இங்கு வந்ததாகவும் உன் னிடம் யாவும் கூறியதாகவும் எனக்கியம்பினான். அப்படி யாயின் நீ நமது வாலிப நண்பனுடைய பெருந்தகைமை யான குணங்களைப்பற்றி புகழ்ந்து கூறி யிருப்பாயென்று நம்புகிறேன்" என்றார்.

கன்னிகை:—இல்லை யில்லை. நான் அப்படிப்பட்ட வார்த் தைகள் ஒன்றுமே கூறவில்லை.

பிநாகபாணிப்பிள்ளை:—"என்ன! உம்முடைய நடக்கை

எல்லா அறிவாளிகளாலும் புகழ்ந்து கொண்டாடத் தக்கது என்று கூடவா நீ கூறவில்லை?'' என்று மிக்க ஆத்திரத்தோடும் வியப்போடும் கேட்டார்.

இராஜசுந்தரி:—''இல்லை. நான் அதைப்பற்றி யொன்றுமே கூறவில்லை. ஏனெனில் அன்னியர் கூறுவதைவிட அத்தகைய அரிய செயலைச் செய்தவர்களுடைய மனச்சாட்சி யடையும் திருப்தி யிருக்கிறதே, அதுவே மிக்க விசேஷமானது'' என்று கூறியதும் கிருஷ்ணராஜை உற்று நோக்கினள்.

அவள் பார்வையால் அவள் மனதில் கிருஷ்ணராஜின் மேல் அவளுக்குண்டாயிருக்கும் சந்தோஷமும் மதிப்பும் எவ்வளவு விசேஷமானதென்று நன்கு விளங்கியது. அச் சமயம் அவள் முகத்தில் ஒருவிதமான பிரகாசம் உண்டாகியது. அவள் மனதில் உண்டாயிருக்கும் சந்தோஷமும் அன்பும் அளவு கடந்ததென்று அவள் முகக்குறி அறிவித்தது.

பிநாகபாணிப்பிள்ளை.—''ஆ! அந்தக் கணபதிப்பிள்ளை மிக்க நல்லவன். பெருந்தகைமை யுடையவன். அவன் பிரதிக்கினை செய்துகொண்டான். ஆ! நான் ஒருவர் இரகசியத்தை வெளியிடலாகாது. இருக்கட்டும். அது தானே வெளிவரும்'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

இராஜசுந்தரி தன்னைப்பார்த்த பார்வையைக் கிருஷ்ணராஜ் கவனித்தான். அதனால் அவனுக்கு அவள்மேலிருந்த அன்பு அதிகமாய்விட்டது. அச்சமயம் அவளை யாலிங்கனம் செய்து கொள்ளலாமென்ற ஆவல் அவனுக்குண்டாகியது.

அது முதல் இராஜசுந்தரி கிருஷ்ணராஜிடம் மிக்க தாராளமாகப் பேசத்தொடங்கினள். அவள் பார்வையி

லும் செய்கையிலும் மொழிகளிலும் ஒருவித மனக்கரைவும் அன்பும் அதிகரித்திருப்பதாக கிருஷ்ணராஜுக்கே புலப்பட்டது. அவர்கள் சகவாசத்திலும் நடப்பிலும் இதுகாறுமிருந்த ஒருவிதத்தடை நீங்கியதுபோ லிருந்தது.

மறுநாட்காலை சவத்தைப்பற்றிய மரணவிசாரணை நடந்தது. கிருஷ்ணராஜு முதல் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டான். அப்போது அவன் கப்பற்சேதத்தைப்பற்றியும் சுருக்கமாகக் கூறவேண்டியிருந்தது. பிறகு கணபதிப்பிள்ளை விசாரிக்கப்பட்டான். அவன் கடலோரம் சவம் அடித்துக்கொண்டு வரப்பட்டதையும் கிருஷ்ணராஜு அதைக் கரைக்கு இழுத்ததையும் பிறகு தங்களிருவர்க்கும் நடந்த சம்பாஷணையைச் சுருக்கமாகவும் கூறினான். பிறகு சவத்தை யெடுத்து வந்த ஆட்கள் விசாரிக்கப்பட்டார்கள். விசாரணை முடிந்தபோது கிருஷ்ணராஜு கணபதிப்பிள்ளையைக் காணலாமென்று பார்த்தான். அவன் எப்படியோ நழுவிவிட் டிருந்தான்.

அதன் மேல் கிருஷ்ணராஜு வீட்டிற்குத் திரும்பினான். அங்கு இராஜசுந்தரி உலவச்செல்வதற்காக அவன் வரவிற்கு எதிர் பார்த்துக்கொண் டிருந்தாள். அவன் வந்ததும் இருவரும் உலவச்சென்றார்கள். இராஜசுந்தரி தன்னிடம் இப்போது நடந்துகொள்ளும் மாதிரியால் வாலிபனுக்கும் அவள்மேல் அன்பு அதிகமாகி விட்டது. தன் மன உணர்ச்சியைப் பற்றி தனக்கே சந்தேகம் உண்டாகும்போது, கிருஷ்ணராஜு "ஆயினும் உண்ணாமுலை நமது சுற்றத்தாள், குழந்தைப் பருவமுதல் நாமும் அவளும் நேசமா யிருந்துவருகிறோம். இராஜசுந்தரி விஷயத்தில் நமக்கு எவ்வளவு நட்புதானுண்டாயினும் அது உண்ணாமுலையிடம் நமக்கிருக்கும் அன்பிற்குச் சம

மாகாது'' என்று கூறி தனக்குத்தானே தேறுதல் உண்
டாக்கிக்கொள்ளுவான்.

உலவச்சென்ற இருவரும் நெடுநேரங்கழித்து வீட்
டிற்குத் திரும்பிவந்தார்கள். அச்சமையம் பிநாகபாணிப்
பிள்ளை வீட்டிற்கு வந்திருந்தார். அன்று அவர் தினம்
வரும்வேளைக்கு ஒருமணி நேரம் முன்னாடியாகவே வந்து
உட்கார்ந்திருந்தார். இவர்கள் உள்ளே வந்ததைக் கண்ட
தும் அவர் மிக்க ஆவலோடெழுந்து கிருஷ்ணராஜின்
தோளைப்பற்றிக்கொண்டு எதிரிலிருந்த மேஜை மேல்
கரத்தைச்சுட்டிக்காட்டி "அதோ! அதோ! அவைகள்
உன்னுடையவைகள்'' என்றார்.

அந்த மேஜைமேல் ஒரு பெட்டியும் ஒரு அரக்குமுத்
திரையிட்ட நீண்ட கடித உறையும் இருந்தன. அந்த உறை
யின்மேல் எழுதி யிருந்தவைகளால் அது அத்தீவின் இரா
ஜப்பிரதிநிதியிடமிருந்து வந்ததெனத் தெரிந்தது. கிருஷ்
ணராஜு அதைப்பிரித்து வாசித்துப் பார்த்தான். அதில்,
" அத்தீவின் இராஜப்பிரதிநிதி யவர்கள் கணபதிப்பிள்ளை
மூலமாய் கிருஷணராஜு கப்பற்சேத மடைந்ததையும்,
அதேசேதத்தால் இறந்துபோன அக்கிழவனைக் காப்
பாற்றக் கிருஷ்ணராஜு தன் பிராணனுக்குத் துணிந்து
செய்த முயற்சிகளையும், அக்கிழவனிடம் அன்பு காட்டி
நடந்து கொண்டதையும், பிறகு அக்கிழவனிட மிருந்த
பொன்னை யெடுத்துக் கொள்ள மறுத்ததையும், கேள்
விப்பட்டு, நீதியும், சத்தியமும், சீவகாருணியமும் பொரு
ந்திய உத்தம குணத்தைத் தாம் அதிகமாகப் புகழ்வதாக
வும், அத்தகைய உத்தமகுண முடைய வாலிபனுக்கே
அக்கிழவன் பொன்னைப் பரிசாக அளித்ததாகவும் எழுதி
யிருந்தது.

சென்னை-600 008

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

# கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அநேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் எவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர், பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் . ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றனவென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆ ஜூலை மீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் | ... 4 | 0 | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் | ... 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை | ... 2 | 0 | பத்மாஸனி | ... 0 | 14 |
| மின்சார மாயவன் | ... 1 | 8 | வீரநாதன் | ... 0 | 12 |
| தேவசுந்தரி | ... 1 | 4 | குணசுந்தரன் | ... 0 | 12 |
| கனகபூஷணம் 2-பாகமும் | ... 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| சுவர்ணாம்பாள் | ... 0 | 12 | கமலசேகரன் | ... 1 | 12 |
| ஆனந்தஸிங் | ... 2 | 0 | பூங்கோதை | ... 0 | 10 |
| மதனபூஷணம் | ... 1 | 0 | இந்திராபாய் | ... 2 | 8 |
| | | | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடையசரித்திர உபதேசங்கள் | 1 | 12 | சகோதரவாஞ்சை | 0 | 6 |
| | | | லோகநாயகி அச்சில் | | |

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.